## கீழக்கரை நகர்மன்ற

கீழக்கரை நகராட்சியில் மன்ற சாதாரணக் கூட்டம் 31.05.2022 ஆம் தேதி செவ்வாய் கிழமை காலை 11.00 மணியளவில் **நகர்மன்ற தலைவர்** தலைமையில் நடைபெற்ற கூட்ட நடவடிக்கைகள்.

**பொருள் : 1**

**நகர்மன்றத் தலைவர் கொண்டுவரும் தீர்மானம்:-**

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, இராமநாதபுரம் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் 2021-22 ஆம் நிதியாண்டின் கீழ், கீழக்கரை மூன்று சந்திப்பு சாலை (கிழக்கு கடற்கரை சாலை) பயணிகள் நிழற்குடை அமைத்தல் பணி ரூ. 10.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளுதல் மற்றும் 5வது வார்டு (முத்துச்சாமிபுரம்) பகுதி மக்களுக்கு சமுதாயக் கூடம் அமைக்கும் பணி ரூ25.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளும் பணிகளுக்கு இராமநாதபுரம் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழ் பரிந்துரை செய்த, மதிப்பிற்குரிய மாவட்ட கழக பொறுப்பாளரும் மற்றும் இராமநாதபுரம் சட்டமன்ற உறுப்பினருமான அண்ணன் திரு. காதர் பாட்சா முத்துராமலிங்கம் MLA அவர்களுக்கு கீழக்கரை நகர்மன்றம் சார்பாக மனமார நன்றி தெரிவிப்பது.

**தீர்மானம் எண்.:** 24 தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**பொருள் : 2**

**நகர்மன்றத் தலைவர் கொண்டுவரும் தீர்மானம்:-**

1. கீழக்கரை நகராட்சியில் 1 முதல் 21 வார்டுகளின் கால்வாய்கள் உயர்த்தி கட்டி சீரமைத்து மூடிகள் அமைக்கப்படும்
2. கீழக்கரை நகராட்சியில் பழுதடைந்து உள்ள பொது குழாய்கள் மறுசீரமைப்பு செய்து பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்படும்

**தீர்மானம் எண்.:** 25 தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

பொருள் : 3

**I) கீழக்கரை நகர்மன்ற 4-வது வார்டு உறுப்பினர் திருமதி. எம். சூரியகலா அவர்கள் கீழ்காணும் பணிகள் செய்து தருமாறு கோரியுள்ளார்.**

| வ.எண். | பணிகள் விபரம் |
|---|---|
| 1. | கீழக்கரை நகராட்சிக்குட்பட்ட 4வது வார்டு இந்து பஜார், முஸ்லிம் பஜார், கிழக்குத் தெரு, தட்டார் தெரு, கிழக்கு நாடார் தெரு, பருத்திக்காரத் தெரு ஆகிய தெருக்களில் கால்வாய்களை சீரமைத்து, மூடி அமைக்கும் பணி. |
| 2. | கீழக்கரை நகராட்சிக்குட்பட்ட 4வது வார்டு, கிழக்குத் தெரு மீன்மார்க்கெட் அருகில் உள்ள இஸ்மாயில் லாட்ஜ் சந்து, தட்டார் தெரு நகை கடை பஜார் எதிரில் உள்ள சந்து ஆகிய பகுதிகளில் பேவர்பிளாக் சாலை அமைக்கும் பணி. |

**II) கீழக்கரை நகர்மன்ற 9-வது வார்டு உறுப்பினர் திரு.எம்.ஐ. நசீருதீன் அவர்கள் கீழ்காணும் பணிகள் செய்து தருமாறு கோரியுள்ளார்.**

| வ.எண். | பணிகள் விபரம் |
|---|---|
| 1 | கீழக்கரை நகராட்சிக்குட்பட்ட 9வது வார்டு எல்லைக்குட்பட்ட தார்சாலைகள் குண்டும் குழியுமாக உள்ளதை சீரமைக்கும் பணி. |
| 2. | கீழக்கரையில் சமீபகாலமாக போக்குவரத்து நெரிசல், வாகனங்கள் பள்ளி நேரங்களில் அதிவேகமாக செல்லுதல் போன்ற பிரச்சனையால் பொதுமக்கள் மற்றும் மிதிவண்டியில், நடந்து பள்ளிக்கு செல்லும் மாணவர்கள் அச்சத்தில் பள்ளிக்கு செல்கின்றனர். அசம்பாவிதங்கள் ஏற்படாமல் மாணவர்கள் பாதுகாப்பை கருதி பள்ளி நேரங்களில் மட்டும் வாகனங்கள் / கனரக மற்றும் சரக்கு வாகனங்கள் / தண்ணீர் வண்டிகள் பள்ளி மண்டலம் பகுதிக்குள் செல்ல தடை விதித்தல். |
| 3. | கீழக்கரை நகராட்சிக்கு உள்ளே வந்து செல்லக்கூடிய கன்னியாகுமாரி / நாகர்கோயில் / திருநெல்வேலி மற்றும் சில விரைவு பேருந்துகள் கீழக்கரை புதிய பேருந்து நிலையத்திற்குள் வராமல் ஏர்வாடி முக்கு ரோடு வழியாக சென்று வருகின்றன. இரவு 12 மணிக்கும் அதற்கும் மேலும் அதிகாலையில் வந்து செல்லக் கூடிய பேருந்துகள் ஏர்வாடி முக்கு ரோட்டில் பயணிகளை இறக்கி விட்டு செல்வதால் வாகனங்கள் கிடைக்காமல், தனியாக வர அச்சப்பட்டு பல சிரமங்களுக்கு ஆளாகின்றனர். ஆகவே மாண்புமிகு அமைச்சர் மற்றும் அதிகாரிகள் மூலம் கீழக்கரை புதிய பேருந்து நிலையத்திற்குள் அனைத்து பேருந்துகளும் வந்து செல்ல நடவடிக்கை எடுக்க தீர்மானம் நிறைவேற்றுதல். |
| 4. | கீழக்கரையில் உள்ள அனைத்து பள்ளிகளுக்கும் நகராட்சி மூலம் இலவச குடிநீர் குழாய் அமைத்து கட்டணமில்லா காவேரி குடிநீர் வழங்கி மாணவ மாணவிகளுக்கு சுத்தமான குடிநீர் கிடைத்திட நடவடிக்கை எடுக்க கோருதல் |

**III) கீழக்கரை நகர்மன்ற 16-வது வார்டு உறுப்பினர் திருமதி.எஸ். ஜனுல் ஆரிபா அவர்கள் கீழ்காணும் பணிகள் செய்து தருமாறு கோரியுள்ளார்.**

| வ.எண். | பணிகள் விபரம் |
|---|---|
| 1. | சாலைத்தெரு தொழுகைப்பள்ளிக்கு முன்புறம் பின்புறம் பேவர்கல் சாலை அமைக்கும் பணி. |
| 2. | பேவர்பிளாக் இல்லாத இடங்களில் பேவர் பிளாக் சாலை அமைத்து தர கோருதல் |

**IV) கீழக்கரை நகர்மன்ற 20-வது வார்டு உறுப்பினர் சேக் உசேன் அவர்கள் கீழ்காணும் பணிகள் செய்து தருமாறு கோரியுள்ளார்.**

| வ.எண். | பணிகள் விபரம் |
|---|---|
| 1. | கீழக்கரை நகராட்சி 21 குச்சி மீனவர் குப்பம் பகுதியிலுள்ள இடுகாட்டு பகுதியில் நிழற்குடை அமைத்தல் பணி மற்றும் மேற்படி இடுகாட்டில் ஹைமாஸ் லைட் அமைத்தல் பணி |
| 2. | 21 குச்சி மீனவர் குப்பம் பகுதியிலுள்ள இடுகாட்டு பகுதியில் பொதுமக்களின் குடிநீர் தேவையை கருத்தில் கொண்டு தண்ணீர் தொட்டி (சின்டெக்ஸ் டேங்க்) அமைத்தல் பணி. |
| 3. | பெத்திரி தெரு மற்றும் அதனை ஒட்டியுள்ள பகுதிகளிலுள்ள மின் கம்பங்களில் விளக்குகள் (மின் விளக்கில்லாத கம்பங்களில்) அமைத்து தரும் பணி. |
| 4. | பெத்திரி தெருவில் குடிநீர் குழாய்களில் போதிய அழுத்தம் இல்லாததால் வீடுகளுக்கு போதிய தண்ணீர் கிடைப்பதில்லை. எனவே, பெத்திரி தெருவுக்கும் 21 குச்சிக்கும் இடையே உள்ள தண்ணீர் குழாய்களை (20 மீட்டர் இடைவெளி) இணைத்து தரும் பணி. |
| 5. | கீழக்கரை நகராட்சிக்குட்பட்ட 21 குச்சி மீனவர் பகுதி முத்தரையர் சமுதாய மக்களுக்கு சமுதாய கூடம் அமைத்து தர கோருதல். |

V) **கீழக்கரை நகர்மன்ற 8-வது வார்டு உறுப்பினர் திரு.எம்.எம்.கே. முகம்மது காசிம் மரைக்கார் அவர்கள் கீழ்காணும் பணிகள் செய்து தருமாறு கோரியுள்ளார்.**

| வ.எண். | பணிகள் விபரம் |
|---|---|
| 1. | கீழக்கரை பேரூராட்சியாக இருந்த 40 வருடங்களுக்கு முன் கீழக்கரை நகரின் துப்புரவு பணிக்கு அரசு பணியாளர்களாக 32 துப்புரவு பணியாளர்கள் நியமனம் செய்யப்பட்டது. இரண்டாம் நிலை நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டு 10 வருடங்களுக்கு மேல், நகர் பல மடங்கு விரிவாக்கம் பெற்றுள்ளது. நகரின் துப்புரவு பணியை கருத்தில் கொண்டு தற்பொழுது காலியாக உள்ள 6 துப்புரவு பணியாளர்கள் இடங்களை உடனடியாக நிரப்பவும் அரசுக்குகோரிக்கை வைக்க கோருதல். |
| 2. | சிறுபான்மை மக்களுக்கு எதிராக ஒன்றிய அரசால் கொண்டு வரப்பட்ட கொடிய சட்டமான CAA, NRC, NPR சட்டங்களை உடனே திரம்ப பெற கோரி நகர்மன்றத்தின் வாயிலாக தீர்மானம் நிறைவேற்றி ஒன்றிய அரசை வலியுறுத்த கோருதல். |
| 3 | கீழக்கரை நகர் தெருக்களில் நாய்கள் தொல்லை மிக அதிகமாயிருப்பதால் பொதுமக்கள் நடந்து செல்ல அச்சப்படுவதால் நாய் தொல்லையிலிருந்து பொதுமக்களை பாதுகாக்க நாய்களை அகற்ற உடனடி நடவடிக்கை எடுக்க கோருதல் மற்றும் மாடுகளினால் போக்குவரத்திற்கு மிகவும் இடைஞூராக இருப்பதால் மாட்டின் உரிமையாளருக்கு அபராதம் விதித்து மாட்டின் தொல்லையிலிருந்து பொதுமக்களை பாதுகாக்க கோருதல். |
| 4 | வடக்குத் தெருவில் நிருபர் அப்துல்லா அவர்களின் வீட்டின் எதிரில் இருக்கக் கூடிய நகராட்சிக்கு சொந்தமான இடம் வழக்கு எண் WA (MD)468/2015 மற்றும் 0542.2016 ஆகிய வழக்குகளில் நகராட்சிக்கு பாத்தியப்பட்ட இடம் என்று தீர்ப்பு கூறப்பட்டு அதில் சாலை விரிவாக்கம் பணிகளுக்கு பயன்படுத்தி கொள்ளவும் உத்தரவு போடப்பட்ட நிலையில் அந்த இடம் தற்போது எந்த உபயோகமின்றி குப்பைகள் நிறைந்து வருகிறது. ஆகவே அந்த இடத்தினை சென்னை நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் சிறப்பு அனுமதி பெற்று ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கவும், அல்லது அந்த இடத்தை Public Negotiation விதியின்படி விற்பனை செய்து அந்த பணத்தை நிதி நெருக்கடியில் தவிக்கும் நமது நகராட்சியின் பொதுநிதியில் சேர்க்கும்படி கோருதல். |
| 5 | கடந்த கூட்டத்தொடரில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தில் ரூ.50 இலட்சத்திற்கான CSI சர்ச் சாலைக்கான வேலைகள் ஆரம்பிப்பதற்கு முன் அந்த சாலையில் போடப்பட்டுள்ள கழிவுநீர் குழாய்களை மராமத்து செய்துவிட்டு சாலை போடும்படி கோருதல். |

**VI) கீழக்கரை நகர்மன்ற 21-வது வார்டு உறுப்பினர் திரு.எஸ்.சித்திக் அவர்கள் கீழ்காணும் பணிகள் செய்து தருமாறு கோரியுள்ளார்.**

| வ.எண். | பணிகள் விபரம் |
|---|---|
| 1. | கீழக்கரை நகராட்சிக்குட்பட்ட முகம்மது காசிம் அப்பா பள்ளி எதிரில் கீழக்கரை நகராட்சிக்குட்பட்ட உரக்கிடங்கு 1 1/2 ஏககர் பகுதியில் 12 ஆம் வகுப்பு வரை உள்ள மேல்நிலைப்பள்ளி கட்டி தர கோருதல் |
| 2 | மேற்கண்ட பகுதியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க கோருதல் |
| 3 | 21 வது வார்டு பகுதியில் உள்ள மின் கம்பங்கள் புதிதாக 45 உள்ளது. இதில் புதிய தெருவிளக்குகள் அமைக்க கோருதல் |
| 4 | 21 வது வார்டு பகுதியில் உள்ள காவேரி குடிநீர் இணைப்பினை புதுப்பித்தும் இல்லாத பகுதியில் புதிதாகவும் செயல்படுத்த குடிநீர் கிடைக்க ஏற்பாடு செய்ய கோருதல் |
| 5 | வீடு வீடாக எடுக்கப்படும் குப்பைகளை ஞாயிறு கிழமை சேர்த்தும் தினமும் எடுத்து குப்பைகள் சேராமல் இருக்க வழிவகுக்குமாறு கோருதல் |
| 6 | பழைய உரக்கிடங்கு பின்புறம் பகுதியில் Chain link Fencing பணிகள் மேற்கொள்ளுதல். |

**VII)கீழக்கரை நகர்மன்ற 6 வது வார்டு உறுப்பினர் திருமதி. எஸ். பைரோஸ் பாத்திமா அவர்கள் கீழ்காணும் பணிகள் செய்து தருமாறு கோரியுள்ளார்.**

| வ.எண். | பணிகள் விபரம் |
|---|---|
| 1. | கீழக்கரை நகராட்சிக்குட்பட்ட அண்ணாப்பா கடை எதிர்புறம் உள்ள சாலையில் குழாய் அமைத்து, புதிதாக அச்சுக்கல் (Paver block) சாலை அமைக்க கோருதல் மற்றும் நான்கு பங்களாவில் இருந்து பெரிய வீடு வரை குடிநீர் குழாய் கழிவு நீர் கலந்து வருவதால் அதனை சரி செய்து தருமாறு கோருதல் |

**VIII)கீழக்கரை நகர்மன்ற 1 வது வார்டு உறுப்பினர் திரு. எஸ். முகம்மது பாதுஷா அவர்கள் கீழ்காணும் பணிகள் செய்து தருமாறு கோரியுள்ளார்.**

| வ.எண். | பணிகள் விபரம் |
|---|---|
| 1. | கீழக்கரை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 1 புதுத்தெரு நகராட்சி பதிவில் புதுக்குடி தெரு என்று உள்ளது. இதனால் அரசு ஆவணங்களான ஆதார் அட்டை, குடும்ப அட்டை, வாக்காளர் அடையாள அட்டை, வீட்டு வரி ஆகியவற்றில் குழப்பங்கள் நிலவுவதால் இந்த குழப்பங்களை தவிர்க்க முறையாக புதுத்தெரு என்று மாற்றியமைக்க ஆவண செய்யுமாறும், மேலும் 16 வது வார்டு 1வது வார்டாக மாறியுள்ளது கதவு எண் மாற்றியமைக்கும் போது முறையாக புதுக்குடி தெருவை, புதுத்தெரு என மாற்றம் செய்ய ஆவண செய்யுமாறு கோருதல் |

| | |
|---|---|
| 2 | கீழக்கரை நகராட்சிக்குட்பட்ட அல் அக் ஷா நகர், தாய் கார்டன், ஜாமியா நகர், இஸ்லாமியா மேல்நிலைப் பள்ளி மற்றும் இஸ்லாமியா தமிழ் மீடியம் பின்புறம் புதிய பேவர் பிளாக் சாலை மற்றும் புதிய மின் வழித்தடங்கள் அமைத்து மின் விளக்கு அமைத்து தருமாறு கோருதல். |

**IX)கீழக்கரை நகர்மன்ற 13 வது வார்டு உறுப்பினர் திருமதி. தா ஜூன் அலிமா அவர்கள் கீழ்காணும் பணிகள் செய்து தருமாறு கோரியுள்ளார்.**

| வ. எண். | பணிகள் விபரம் |
|---|---|
| 1. | கீழக்கரை நகராட்சிக்குட்பட்ட மின்கம்பம் எண். 14/36 ல் புது மின்விளக்கு அமைத்தல் |
| 2. | 17/11 எதிர் சந்தில் கோக்கா அஹமது தெரு மெயின் ரோட்டில் மூன்று போஸ்ட் உள்ளது. அதற்கு புது மின்விளக்கு அமைத்தல் |
| 3 | சொக்கநாதர் கோவில் எதிரில் மின்கம்பத்தில் மின்விளக்கு அமைத்தல் |
| 4 | சொக்கநாதர் கோவில் அருகில் ஏற்கெனவே பழுதடைந்துள்ள குடிநீர் தொட்டி, மீண்டும் பழுது பார்த்து (மோட்டார் ) மீண்டும் பயன்பாட்டுக்கு கொண்டு வர கோருதல். |
| 5 | சொக்கநாதர் கோவில் மின்கம்பம் அருகில் குப்பை கிடங்கு போல் காட்சி அளிக்கிறது. குப்பைகளை முற்றிலும் அகற்றி இடத்தை சுத்தமாக வைக்க கோருதல். |
| 6 | குப்பை கொட்ட வேண்டாம் என்ற நகராட்சி பலகை 6 எண்ணம் கோருதல். |
| 7 | சின்ன கடைத் தெருவில் 2 வேகத்தடைகள், அகமது தெரு பள்ளி கூடம் அருகில் 2 வேகத்தடைகள், சொக்கநாதர் கோவில் தெருவில் 2 வேகத்தடைகள் அமைக்க கோருதல் |
| 8 | சொக்கநாதர் கோவில் 3 சந்துகளில் இன்டர்லாக் சாலை அமைத்தல் மற்றும் கோக்கா அகமது தெருவில் 2 இன்டர்லாக் சாலை வசதிகள் செய்ய கோருதல். |
| 9 | ஓடக்கரை பள்ளி அருகில் கால்வாய் பணி சீரமைத்தவுடன், சேதம் அடைந்த இன்டர்லாக் சாலைகளை உடனே சரி செய்ய கோருதல். |
| 10 | சொக்கநாதர் கோவில் தெருவில் உள்ள தார் ரோடு முழுவதும் பழுதடைந்துள்ளதால், சாலை புதுப்பித்து தருமாறு கோருதல். |
| 11 | சொக்கநாதர் கோவில் தெருவில் இலவச குடிநீர் இணைப்பு அமைத்து தர கோருதல். |
| 12 | அகமது தெருவில் உள்ள வாய்க்கால் பாக்ஸ் மூன்று பழுதடைந்துள்ளதால் அதனை சரி செய்து புதிய பாக்ஸ் அமைக்க கோருதல் |
| 13 | சின்னகடைத் தெருவில் உள்ள வாய்க்காலில் ஒரு பாக்ஸ் பழுதடைந்துள்ளதால் அதனை சரி செய்து, பைப்லைன் சரிசெய்து தருமாறு கோருதல். |

| | |
|---|---|
| 14 | சின்ன கடைத்தெருவில் உள்ள கண்மனி கடை அருகில் போக்குவரத்து கண்ணாடி அமைத்து தர கோருதல். |
| 15 | செங்கார தெரு மாரியம்மன் கோவிலில் இருந்து இரண்டு சந்துக்களில் பேவர் பிளாக் சாலை அமைத்து தருமாறு கோருதல். |
| 16 | பரப்பான் சம்மட்டி தெருவில் பேவர் பிளாக் சாலை அமைத்து தருமாறு கோருதல். |
| 17 | ஈசா தண்டயல் தெருவில் பேவர் பிளாக் சாலை அமைத்து தருமாறு கோருதல். |
| 18 | சொக்கநாதர் கோவில் அருகில் உள்ள குப்பை கொட்டும் பகுதியில் Chain link Fencing பணிகள் மேற்கொண்டு செடிகள் அமைத்தல். |

**X)கீழக்கரை நகர்மன்ற 1 0வது வார்டு உறுப்பினர் திருமதி. டி. பவித்ரா அவர்கள் கீழ்காணும் பணிகள் செய்து தருமாறு கோரியுள்ளார்.**

| வ.எண். | பணிகள் விபரம் |
|---|---|
| 1. | கீழக்கரை நகராட்சிக்குட்பட்ட 10 வார்டு பட்டாணியப்பா தர்ஹா பகுதியில் பாதாள சாக்கடை அமைத்தல் மற்றும் கழிவுநீர் மூடிகள் அமைத்து தர கோருதல் |

**XI)கீழக்கரை நகர்மன்ற 12வது வார்டு உறுப்பினர் திருமதி. உம்மு சல்மா பீவி அவர்கள் கீழ்காணும் பணிகள் செய்து தருமாறு கோரியுள்ளார்.**

| வ.எண் | பணிகள் விபரம் |
|---|---|
| 1. | கீழக்கரை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.12 நடுத்தெரு சதக்கத்துன் ஜாரியா நடுநிலைப்பள்ளி பின்ற வாசல் அருகில் 2 வேகத்தடைகள் அமைக்கும் பணிகள் |
| 2. | 12வது வார்டுக்குட்பட்ட சந்து பகுதிகளில் சாலை மேடும் பள்ளமாக இருப்பதால் மழைபெய்யும் காலங்களில் ஆங்காங்கே நீர்தேங்கி பொதுமக்கள் மற்றும் மாணவர்கள் செல்ல சிரமமப்படுவதால், சந்து பகுதிகளில் உள்ள அனைத்து பகுதிகளிலும் கழிவுநீர் குழாய் அமைத்து, பேவர் பிளாக் சாலை அமைத்து தருமாறு கோருதல் |
| 3 | 12வது வார்டுக்குட்பட்ட நடுத்தெரு மற்றும் பேட்டைத் தெரு (ஆட்டோ ஸ்டாண்ட்) ஆகிய பகுதிகளில் ஹைமாஸ் விளக்கு அமைத்து தர கோருதல் |
| 4 | 12வது வார்டுக்குட்பட்ட சந்து பகுதிகளில் பெரிய கழிவுநீர் குழாய் அமைக்கும் பணி மற்றும் கால்வாய்கள் 'தூர்வாறும் பணி |
| 5 | 12வது வார்டு நடுத்தெரு சதக்கத்துன் ஜாரியா நடுநிலைப்பள்ளி பின்புற வாசல் அருகில் மாணவர்களின் நலன் கருதி 2 வேகத்தடை அமைக்கும் பணி |

**XII)கீழக்கரை நகர்மன்ற 5வது வார்டு உறுப்பினர் திருமதி. எஸ். காயத்ரி அவர்கள் கீழ்காணும் பணிகள் செய்து தருமாறு கோரியுள்ளார்.**

| வ.எண். | பணிகள் விபரம் |
|---|---|
| 1. | கீழக்கரை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.5 முத்துச்சாமிபுரம் பகுதியில் கழிவுநீர் அனைத்தும் புதிய பேருந்து நிலையத்திற்கு அருகே உள்ள மாட்டுக் கொட்டகைக்கு பைப்லைன் மூலம் செல்லும் படி அமைத்து தர கோருதல். |
| 2 | குடிநீர் குழாய் கள் பழுதடைந்துள்ளதால் அதனை சரிசெய்து தர கோருதல் |
| 3 | அன்புநகர் பகுதியில் 5, 7, 10 ஆகிய தெருக்களில் பேவர்பிளாக் சாலை அமைத்து தர கோருதல் |
| 4 | VAO அலுவலகத்திருந்து புதிய பேருந்து நிலையத்திற்கு வரும் பேருந்துகள் செல்வதற்கு சாலை குண்டும் குழியுமாக உள்ளதால், இப்பகுதியில் தார்ச்சாலை அமைத்து தர கோருதல் |
| 5 | கீழக்கரை நகராட்சிக்குட்பட்ட அன்புநகர் வடபுறம் உள்ள மயானக்கரை திறந்த நிலையில் உள்ளது. அதில் சுற்றுச்சுவர் கட்டித் தர கோருதல். |

**XIII)கீழக்கரை நகர்மன்ற 19வது வார்டு உறுப்பினர் திரு.சஃப்ரஸ் நவாஸ் அவர்கள் கீழ்காணும் பணிகள் செய்து தருமாறு கோரியுள்ளார்.**

| வ.எண். | பணிகள் விபரம் |
|---|---|
| 1. | கீழக்கரை நகராட்சிக்குட்பட்ட 19 வார்டு பகுதியில் 20 வருடங்களுக்கு முன்பு அமைக்கப்பட்ட வாறுகால் சீரமைப்பு செய்யப்படவில்லை மற்றும் 100 மீட்டர் தொலைவில் கழிவுநீர் வசதி இல்லாமல் செப்டிக் டேங்க் பயன்படுத்தி வருவதால், 100 மீட்டர் தொலைவிற்கு கழிவுநீர் குழாய் அமைத்து கழிவு நீர் செல்ல வசதி ஏற்படுத்தி தருதல் மற்றும் கடற்கரை பகுதியாக இருப்பதால் அடிக்கடி கழிவு நீர் தொட்டி நிரம்பி விடுகிறது. எனவே, கழிவுநீர் குழாய் மற்றும் தொட்டிகள் அமைத்து தருமாறு கோருதல். |

**XIV)கீழக்கரை நகர்மன்ற 17வது வார்டு உறுப்பினர் திரு.ஐ.செய்யது முகம்மது பயஸ்தீன் அவர்கள் கீழ்காணும் பணிகள் செய்து தருமாறு கோரியுள்ளார்.**

| வ.எண். | பணிகள் விபரம் |
|---|---|
| 1. | பழைய பேருந்து நிலையத்திலிருந்து சாலைத் தெரு செல்லும் வழியில் Chain link Fencing பணிகள் மேற்கொள்ளுதல். |

<u>அலுவலக்குறிப்பு</u>

மேற்காணும் நகர்மன்ற உறுப்பினர்களின் கோரிக்கைகள் நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டு மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும்.

**தீர்மானம் எண்.: 26**

1) **I , II, III, IV-** தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.
2) **V-** வ.எண். 1, 2, 3 தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. வ.எண்.4 Special order போட்டு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.
3) **VI-** வ.எண். 2,3,4,5,6 பொருள் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது
4) **VII, VIII-** தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.
5) **IX-** தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. வ.எண்.9 பரிசீலனைக்குப் பிறகு நிறைவேற்றப்பட்டது.
6) **X-** அனைத்து பகுதிகளிலும் பாதாள சாக்கடை தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.
7) **XI, XII, XIII, XIV -** தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**பொருள் : 4**

கீழக்கரை நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் ரூ.150.00 இலட்சம் மதிப்பீட்டில் கலைஞர் நகர்புற மேம்பாட்டுத் திட்டத்தில் (KNMT) வார்டு எண்.2 சர்வே எண்.444–1B இந்துக்கள் மயானத்தில் நவீன தகனமேடை (LPG) அமைக்கும் பணிக்கு 25.01.2022–ம் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. அன்று வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் தொழில் நுட்ப கூறல் (Technical Bid) ஒப்பந்த ஆவணத்தின்படி நிபந்தனைகளை நிறைவு செய்திருப்பதாக இந்நகராட்சி தொழில்நுட்ப கூராய்வு குழுவால் ஆய்வு செய்து 25.02.2022 அன்று பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் ஒப்பந்தப்புள்ளிகளின் விலைக்கூறல் (Price Bid) 03.03.2022–ந் தேதி பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. அதன்படி இந்நகராட்சிப் பொறியாளரால் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

மேலும், ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியலின்படி மதிப்பீட்டு விலைவிகிதத்தினை காட்டிலும் 4.45% கூடுதலில் குறைவான விலைவிகிதம் குறிப்பிட்டுள்ள M/s. நெப்ட்யூன் ஆட்டோமேசன், ஈரோடு நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டை விட கூடுதலாக ஒப்பந்தம் கோரியுள்ளதால் மதிப்பீட்டை விட குறைவாக உடன்படிக்கை செய்து தர (Negotiation) கேட்டு பெறுவதற்கும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி விலை குறைப்பு செய்ய கோரியதில், திட்டப் பணிக்கான மூலப் பொருட்கள் மற்றும் வேலை ஆட்களின் கூலி உயர்வு காரணமாக மேற்கண்ட பணிக்குரிய மதிப்பீட்டை காட்டிலும் விலை குறைப்பு செய்ய இயலாது என ஒப்பந்ததாரரால் 07.03.2022–ந் தேதிய கடிதத்தின் வாயிலாக தெரிவிக்கப்பட்டுள்ளது மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**மதிப்பீடு ரூ. 150.00 இலட்சம்**

| வ. எண் | வேலையின் விபரம் | ஒப்பந்ததாரர் பெயர் மற்றும் முகவரி | ஒப்பந்ததாரரின் ஒப்பந்ததொகை ரூபாய் மற்றும் ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|---|
| 1 | கீழக்கரை நகராட்சிக்குட்பட்ட இந்துக்கள் மயானத்தில் நவீன தகனமேடை (LPG) அமைக்கும் பணி | M/s. Neptune Automation<br>RSF 83/3, 84/1, A1 Vaikkal Road,<br>Pallipalayam,<br>Nasiyanur Post - 638107<br>Erode. | ரூ.1,41,27,294/– மதிப்பீட்டு விலைவிகிதத்தினை காட்டிலும் 4.45% கூடுதல் |
| | | M/s. Good Care Enviro System Pvt. Ltd<br>No.16 Lakshmi nagar 12th Street,<br>Moulivakkam,<br>Chennai-600116. | ரூ.1,42,69,311/– மதிப்பீட்டு விலைவிகிதத்தினை காட்டிலும் 5.50% கூடுதல் |

[கோப்பு எண்.384/2021/இ1 ]

**அலுவலகக் குறிப்பு.**

ஒப்பந்தகாரர் மதிப்பீட்டு தொகையை விட 4.45% கூடுதலாக விலை விகிதம் கொடுத்துள்ளதை விலை குறைப்பு செய்து கொடுக்க கோரியதில், திட்டப் பணிக்கான மூலப் பொருட்கள் மற்றும் வேலை ஆட்களின் கூலி உயர்வு காரணமாக மேற்கண்ட பணிக்குரிய மதிப்பீட்டை காட்டிலும் விலை குறைப்பு செய்ய இயலாது என தெரிவித்ததின் அடிப்படையில் மதிப்பீட்டு விலைவிகிதத்தினை காட்டிலும் (+) 4.45 சதவீதம் கூடுதலில் குறைவாக கொடுக்கப்பட்ட ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஒப்புக்கொள்ள வைக்கப்பட்டது. மேலும் திட்டப்பணிக்குரிய மதிப்பீட்டு தொகையை விட கூடுதலாகும் செலவினத் தொகையினை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் பார்வைக்கு வைக்கப்பட்டது. மேலும் 29.03.2022 அன்று நகர்மன்ற கூட்டத்தில் மேற்காணும் பொருள் தொடர்பாக நகர்மன்ற உறுப்பினர்களால் ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டதால், மேற்படி தீர்மானம் தற்காலிகமாக ஒத்தி வைக்கப்பட்டது. தற்போது 13.05.2022 ஆம் தேதி சென்னை நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் காணொலி ஆய்வு கூட்ட அறிவுரையின்படி மேற்படி திட்டம் தமிழக அரசால் பரிந்துரைக்கப்பட்ட திட்டமாகும். பொதுமக்களுக்கு பயன்தரக்கூடிய பணியாக இருப்பதாலும் உடனடியாக இத்திட்டத்தினை செயல்படுத்த அறிவுறுத்தப்பட்டுள்ளது. அதனை தொடர்ந்து 16.05.2022 அன்று M/s. Neptune Automation, Erode நிறுவனத்திற்கு பணி உத்திரவு வழஙகப்பட்டுள்ளது இந்நகர்மன்றத்தின் பார்வைக்கும் வைக்கப்படுகிறது.

**தீர்மானம் எண்.: 27** Peace கமிட்டி போட்டு பிறகு பரிசீலித்து முடிவு எடுக்கப்படும்

**பொருள் : 5**

**கீழக்கரை நகராட்சி பொதுசுகாதார பிரிவில் குப்பைகள் அகற்ற பயன்படுத்தப்பட்டு வரும் டிரை சைக்கிள் வண்டிகளில் பழுது நீக்கம் செய்யும் பணிக்கு, ஒப்பந்தப்புள்ளி கோரவும், அதற்கான உத்தேச செலவினம் ரூ.2,00,000/- க்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.**

**(கோப்பு எண்.163/2022.எச்1)**

**அலுவலக குறிப்பு**

பொதுசுகாதார பணிகள் அவசர அவசியம் கருதி ஒப்பந்தப்புள்ளி கோர மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்**: 28 தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**பொருள் : 6**

கீழக்கரை நகராட்சி பொதுசுகாதார பிரிவிற்கு குப்பைகளை சேகரிக்கும் பணிகளுக்காக வாங்கப்பட்ட பேட்டரி வாகனங்களில், ஏற்பட்டுள்ள பழுதுகளை சரி செய்யும் பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரவும், அதற்கான உத்தேச செலவினம் ரூ. 5,00,000/-க்கும் நகர்மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

**(கோப்பு எண்.164/2022.எச்1)**

**அலுவலக குறிப்பு**

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) பொதுசுகதார பணிகளின் அவசர அவசியம் கருதி, பேட்டரி வாகனங்களில் ஏற்பட்டுள்ள பழுதுகளை சரி செய்வதற்கு இந்நகராட்சி பொதுசுகாதார ஆய்வாளர் அவர்களிடமிருந்து பழுதுகள் குறித்த விரிவான குறிப்பு பெற்று அதன்படி, ஒப்பந்தப்புள்ளி கோர மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்**: 29 தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**பொருள் : 7**

கீழக்கரை நகராட்சிக்குட்பட்ட உரக்கிடங்கு பகுதியில் உள்ள குப்பை மேடுகளை சுத்தம் செய்வதற்கு தமிழ்நாடு அரசு நிறுவனம் மூலம் இயந்திரத்தினை பயன்படுத்தவும், அதற்கான உத்தேச செலவினம் ரூ. 2,00,000/-க்கும் நகர்மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**(கோப்பு எண்.165/2022.எச்1)**

**அலுவலக குறிப்பு**

பொதுசுகதார பணிகளின் அவசர அவசியம் கருதி வாடகை அடிப்படையில் "செயின் டோசர்" பயன்படுத்த ஒப்பந்தப்புள்ளி கோர மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்**: 30 தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**பொருள் : 8**

கீழக்கரை நகராட்சிக்குட்பட்ட பொதுசுகாதார ஆய்வாளர் அவர்களின் 12.04.2022ந் தேதிய குறிப்பு அறிக்கையின்படி, இந்நகராட்சி கழிவு நீர் உறிஞ்சும் வாகனம் TN65Q9563ல் ஏற்பட்டுள்ள பழுதுகளை சரி செய்ய இந்நகராட்சி தூய்மை பணி மேற்பார்வையாளர் திரு. மா. சக்திவேல் என்பவர் மூலம் பல்வேறு பழுது நீக்கம் செய்யும் நிறுவனங்களிடமிருந்து விலைப்புள்ளிகள் கோரவும், அதற்கான செலவினம் ரூ. 50,000/-க்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**(கோப்பு எண்.162/2022.எச்1)**

**அலுவலக குறிப்பு**

பொதுசுகதார பணிகளின் அவசர அவசியம் கருதி TN65Q9563 கழிவுநீர் வாகனத்தில் ஏற்பட்டுள்ள பழுதுகளை சரி செய்ய விலைப்புள்ளிகள் கோரவும், அதற்கான செலவினத்திற்கும் மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.:** 31 தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**பொருள் : 9**

கீழக்கரை நகராட்சி பொதுசுகாதார ஆய்வாளர் அவர்கள் மற்றும் தூய்மை பணி மேற்பார்வையாளர்களின் குறிப்பு அறிக்கையின்படி, கீழக்கரை நகராட்சிக்குட்படட 21 வார்டு பொதுமக்களின் நலன் கருதியும், பொதுசுகாதார பணிகளின் அவசர அவசியம் கருதியும் கீழ்காணும் விவரப்படியான பொதுசுகாதார பணிகளுக்கான தளவாட பொருட்களை "இராம்கோ கூட்டுறவு சிறப்பு அங்காடி" மூலம் வாங்குவதற்கும், அதற்கான உத்தேச செலவினம் ரூ. 1.50 இலட்சத்திற்கும் நகர்மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 1. | கூட்டுமாறு | 32 |
| 2 | மண்வெட்டி | 25 |
| 3 | கரண்டி | 25 |
| 4 | கடப்பாறை | 2 |
| 5 | அருவாள் | 6 |
| 6 | கத்தி கம்பு | 4 |
| 7 | பெருக்குமாறு | 32 |
| 8 | சாந்து சட்டி | 20 |
| 9 | கைபுல்லுவாரி | 25 |
| 10 | ப்ரஸ் கட்டை | 25 |

**(கோப்பு எண்.136/2022../எச்1)**

**<u>அலுவலக குறிப்பு</u>**

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) இந்நகர் பொதுமக்களின் நலன் கருதியும், பொதுசுகதார பணிகளின் அவசர அவசியம் கருதியும் நகர் மன்றத்தின் முன் அனுமதியினை எதிர்நோக்கி, நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று தளவாட பொருட்கள், இராம்கோ கூட்டுறவு சிறப்பு அங்காடி மூலம் வாங்குவதையும், அதற்கான செலவினத்தையும் மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மானம் எண்</u>.: <u>32</u>** தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**<u>பொருள் : 10</u>**

கீழக்கரை நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் பராரியாக சுற்றி திரியும் நாய்களை பிடித்து தடுப்பூசி போட்டு கருத்தடை செய்யும் பணியினை மேற்கொள்ள இந்நகராட்சி நகர்மன்ற தீர்மான எண். 06, நாள். 29.03.2022ல் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. அதன்படி, நாய் ஒன்றுக்கு ரூபாய் 700/- வீதம் கணக்கிட்டு விவேகா அறக்கட்டளை தேவகோட்டை என்ற நிறுவனத்தின் மூலம் நாய்களை பிடித்து கருத்தடை செய்யும் பணிகளை மேற்கொள்ள நகர்மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>**

பொதுமக்களின் பாதுகாப்பு நலனை கருத்தில் கொண்டு நகர்மன்றத்தின் முன் அனுமதியினை எதிர்நோக்கி, நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று விவேகா அறக்கட்டளை தேவகோட்டை நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்கியதையும் அதற்கான செலவினத்தையும் மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மானம் எண்</u>.: <u>33</u>** தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**<u>பொருள் : 11</u>**

அரசாணை (நிலை) எண்.79, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மா.ந.2) துறை நாள்.31.05.2013 மற்றும் அரசாணை (நிலை) எண்.118, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மா.ந.2) துறை நாள்.26.09.2014 மற்றும் சென்னை நகராட்சி நிர்வாக ஆணையர் கடிதம் ந.க.எண்.18812/2017/மாநஅ–4, நாள். 26.02.2020 ஆகியவற்றில் தெரிவித்துள்ளவாறு, இந்நகராட்சி பேருந்து நிலைய வளாகத்தில் செயல்பட்டு வரும் அம்மா உணவக சமையல் பணிக்கு தேவைப்படும் காய்கறி வகைகளை அன்றாடம் 01.11.2021 முதல் 30.04.2022 வரை ஆறு மாதங்களுக்கு வெளிச்சந்தை விலையில் விநியோகம் செய்ய விலைப்புள்ளி கோரப்பட்டு இவ்வலுவலக ந.க.எண். 187/2020/இ1, நாள்.29.10.2021–ன்படி விநியோக உத்தரவு வழங்கப்பட்டது. இந்த உத்தரவு காலம் 30.042022–ந் தேதியுடன் முடிவடைய உள்ளதால், மேற்காணும் அரசாணை மற்றும் கடிதங்களில் தெரிவித்துள்ளவாறு, 01.05.2022 முதல் தொடர் நடவடிக்கை மேற்கொள்ள இவ்வலுவலக பணி மேற்பார்வையாளர் / பொறுப்பு அலுவலர் அவர்களால் கோரப்பட்டுள்ளது.

ஆகவே, அம்மா உணவகத்திற்கு தேவையான காய்கறிகள் கீழ்காணும் அளவுகளின்படி **01.05.2022** முதல் **30.04.2023** வரை ஒரு வருடத்திற்கு அன்றாடம் காய்கறிகள் விநியோகம் செய்ய உள்ளூர் விலைப்புள்ளிகள் பெற்று நடவடிக்கை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| **வ. எண்** | **காய்கறிகள் விவரம்** | **அளவு** |
|---|---|---|
| 1 | வெள்ளைப் பூசணிக்காய் / முள்ளங்கி | **1** கிலோ |
| 2 | சின்னவெங்காயம் | **1** கிலோ |
| 3 | பெரிய வெங்காயம் | **1 1/2** கிலோ |
| 4 | தக்காளி | **3 1/2** கிலோ |
| 5 | கேரட் | **1** கிலோ |
| 6 | கத்திரிக்காய் | **1** கிலோ |
| 7 | உருளை கிழங்கு | **1** கிலோ |
| 8 | பீன்ஸ் | **1** கிலோ |
| 9 | கருவேப்பிலை,மல்லி மற்றும் புதினா | **1/2** கிலோ |
| 10 | பச்சைமிளகாய் | **1/2** கிலோ |
| 11 | இஞ்சி | **0.100** கிராம் |
| | **மொத்தம்** | **12.100 கி.கி** |

**அலுவலக குறிப்பு**

1. இந்நகராட்சி அம்மா உணவகத்திற்கு **01.05.2022** முதல் **30.04.2023** வரை உள்ளூர் விலைப்புள்ளி பெற்று காய்கறிகள் விநியோகம் செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.
2. இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவினங்கள் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.:** **34** முன் அனுமதி பெற்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**பொருள் : 12**

கீழக்கரை நகராட்சி 2022-2023 ஆம் நிதியாண்டிற்கான இவ்வலுவலக பொதுப்பிரிவு, பொறியியல் பிரிவு, வருவாய் பிரிவு, பொதுசுகாதாரப் பிரிவு, நகரமைப்பு பிரிவு பணியாளர்களுக்கு தேவையான எழுதுபொருட்கள், படிவங்கள், பதிவேடுகள், ரசீது புத்தகங்கள், வெள்ளை தாள்கள் போன்ற பொருட்கள் கொள்முதல் செய்வதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ. 4,00,000/- மற்றும் கணினி உபகரணங்கள் டோனர், கீபோர்டு, மவுஸ், பிரிண்டர் ரிப்பன் போன்ற பொருட்கள் கொள்முதல் செய்வதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ. 3,00,000/- ஆகும். எனவே, மேற்காணும் விவரப்படியான பொருட்கள் அங்கீகரிக்கப்பட்ட கூட்டுறவு நிறுவனம் மூலம் கொள்முதல் செய்வதற்கு ஆகும் உத்தேச செலவினத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

(கோப்பு எண்.510/சி2/2017)

**<u>அலுவலக குறிப்பு</u>**

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) அலுவலகப் பணிகளின் அவசர அவசியத்தின் காரணமாக அங்கீகரிக்கப்பட் கூட்டுறவு நிறுவனம் மூலம் பொருட்கள் கொள்முதல் செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.
3) உத்தேச செலவினத் தொகையை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மானம் எண்.: 35</u>** தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**<u>பொருள் : 13</u>**

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.1725/2022/எம்.3, நாள். 24.02.2022 மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், மதுரை அவர்களின் சுற்றிக்கை ந.களண்.1723/2022/பி1, நாள். 01.04.2022ல் புதிய ஈப்பு வாகனம் நிபந்தனைகளுக்குட்பட்டு ஈப்பு வாகனம் வாங்கிட கருத்துரு சமர்ப்பிக்க தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி, கீழக்கரை நகராட்சிக்கு புதிய ஈப்பு வாகனம் வாங்கிட தற்போது பயன்பாட்டில் உள்ள TN65 S 4101 பொலிரோ வாகனம் கடந்த 2014 ஆம் ஆண்டு வாங்கப்பட்டு தற்போது 9 ஆண்டுகள் நிறைவடைந்துள்ளன. தற்போது ஈப்பு வாகனத்தின் செயல் திறன் குறைந்த எரி பொருள் மற்றும் பராமரிப்பு செலவினங்கள் அதிகமாகிறது. எனவே, மேற்காணும் சுற்றறிக்கையில் தெரிவித்துள்ளவாறு, இந்நகராட்சிப் பொறியாளர்களால் புதிய ஈப்பு வாகனம் வாங்கிட இவ்வலுவலக ந.க.எண். 136/2022/இ1ன்படி விலைப்புள்ளி பெற்று சமர்ப்பிக்க தெரிவிக்கப்பட்டதன்படி, மதுரை Automotive Manufactures Pvt. Ltd., நிறுவனத்தின் விலைப்புள்ளி மற்றும் கருத்துரு உரிய வழிமுறையாக சென்னை நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களுக்கு கருத்துரு சமர்ப்பிக்கப்பட்டது. அதனை தொடர்ந்து நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.1725/2022/எம்3, நாள். 06.05.2022னன்படி புதிய ஈப்பு வாகனம் நகராட்சிகளில் அனுமதிக்கப்பட்ட பொலிரோ வாகனம் தற்போது கொள்முதல் செய்யப்படாமல் இருப்பின் நகர்மன்றத் தலைவருக்கு பொலிரோ வாகனத்திற்கு பதிலாக ஸ்கார்பியோ வாகனம் ரூ.16.80 இலட்சம் அரசு நிர்ணயம் செய்யப்பட்ட GEM Rate விலைக்கு மிகாமல் விதிகளுக்குட்பட்டு வாங்கிட மன்றத்தின் அனுமதிக்காக முன் வைக்கப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு:</u>**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணியினை இந்நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.
3. அரசிடம் முழு மானியமாக நிதி பெற்று பணியினை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
4. கூடுதலான செலவினத்தை இந்நகராட்சி வருவாய் நிதி 2022–23 ன் கீழ் மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

**<u>தீர்மானம் எண்.: 36</u>**

அரசு முழு மானியம் பெற்று வாங்கப்படும். அல்லது நகராட்சியின் நிதி நிலையை பொருத்து பின்னர் வாங்கப்படும்.

**பொருள் : 14**

அரசாணை (நிலை) எண்.52 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழஙகல் (மாந 4) துறை நாள்.30.04.2022–ன்படியும் நகராட்சி நிர்வாக இயக்குநர் சுற்றறிக்கை ந.க.எண். 40032/2012/ஆர்1, நாள்.01.04.2022–ன்படியும் உள்ளாட்சி அமைப்புகளிலுள்ள சொத்துவரி விதிப்புகளை, 01.04.2022 முதல் பின்வரும் வீதத்தில் சொத்துவரி/காலிமனை வரி உயர்வு செய்து சீராய்வு பணிளை மேற்கொள்ள ஆணையிடப்பட்டுள்ளது.

1) 600 சதுரஅடிக்கும் குறைவான பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடஙகளுக்கு ஏற்கனவே உள்ள சொத்துவரியில் 25% உயர்வு
2) 601 முதல் 1200 சதுரஅடி வரை பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடஙகளுக்கு ஏற்கனவே உள்ள சொத்துவரியில் 50% உயர்வு
3) 1201 முதல் 1800 சதுர அடி வரை பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடஙகளுக்கு ஏற்கனவே உள்ள சொத்துவரியில் 75% உயர்வு
4) 1800 சதுர அடிக்கு அதிகமாக பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடஙகளுக்கு ஏற்கனவே உள்ள சொத்துவரியில் 100% உயர்வு
5) வணிகப் பயன்பாட்டு கட்டடஙகளுக்கு தற்போதுள்ள சொத்துவரியில் 100% உயர்வு
6) தொழிற்சாலை பயன்பாட்டு கட்டடம் மற்றும் சுய நிதி பள்ளி மற்றும் கல்லூரி கட்டடஙகளுக்கு தற்போதுள்ள சொத்துவரியில் 75% உயர்வு
7) காலிமனை வரிவிதிப்பிற்கு தற்போதுள்ள காலிமனை வரியில் 100% உயர்வு

மேற்காணும் சொத்து வரி பொது சீராய்வு தொடர்பான அறிவிப்பினை நாளிதழ்களில் விளம்பரம் செய்வதற்கும், மாவட்ட அரசிதழில் வெளியிடுவதற்கும், சுய மதிப்பீட்டு படிவஙகள் அச்சிடுவதற்கும் மற்றும் எழுதுப்பொருட்கள் போன்றவைகளை கூட்டுறவு நிறுவனம் மூலம் கொள்முதல் செய்வதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ 6.00 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது

**கோப்பு எண். 133/2022/அ1**

**அலுவலக குறிப்பு.**

1. மேற்கண்ட அரசாணையின்படி சொத்துவரி/காலிமனை பொதுசீராய்வு தொடர்பான அனைத்து பணிகளையும் மேற்கொள்ள மன்றம் அனுமதி அளிக்கலாம்.
2. சொத்துவரி/காலிமனை பொதுசீராய்வு தொடர்பான அறிவிப்பினை நாளிதழ்களில் விளம்பரம் செய்வதற்கும், அதற்கான செலவினஙகளுக்கும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.
3. சொத்துவரி/காலிமனை பொதுசீராய்வு தொடர்பான அறிவிக்கையினை மாவட்ட அரசிதழில் வெளியிடுவதற்கும், அதற்கான செலவினஙகளுக்கும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.
4. சொத்துவரி/காலிமனை தொடர்பான படிவஙகளை நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் சுற்றறிக்கையின்படி குடியிருப்பு கட்டடத்திற்கு இளம் நீல நிறஙகளிலும் , வணிக பயண்பாட்டு கட்டடத்திற்கு இளம் சிவப்பு நிறஙகளிலும் தொழிற்சாலை கட்டடத்திற்கு வெள்ளை நிறஙகளிலும் சுய நிதி பள்ளி/கல்லூரி கட்டடத்திற்கு இளம் பச்சை நிறஙகளிலும் மற்றும் காலிமனை இடத்திற்கு இளம் மஞ்சள் நிறஙகளிலும் அச்சடிப்பதற்கும், மற்றும் எழுதுப்பொருட்கள் போன்றவைகளை கூட்டுறவு நிறுவனம் மூலம் கொள்முதல் செய்வதற்கும் அதற்கான செலவினஙகளுக்கும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.
5. மேற்காணும் சொத்துவரி/காலிமனை தொடர்பான செலவினஙகளை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**தீர்மானம் எண்.:** 37 தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**<u>பொருள் : 15</u>**

கீழக்கரை நகராட்சிக்குட்பட்ட 21 வார்டுகளில் உள்ள வீட்டு குடியிருப்புகளில் இருந்து வெளியேறும் கழிவுநீர் பிரதான குழாய் மூலம் புதுக்குடி கழிவுநீர் பம்பிங் ஸ்டேசன், தட்டான்தோப்பு பம்பிங் ஸ்டேசன் மற்றும் பேருந்து நிலைம் அருகில் உள்ள மாட்டுக்கொட்டகை பம்பிங் ஸ்டேசன் பகுதியில் சேகரமாகி கழிவுநீர் வெளியேற்றப்பட்டு வருகிறது. இந்நகர் முழுவதும் உள்ள கழிவுநீர் குழாய்கள் பல வருடங்களுக்கு முன் போடப்பட்டுள்ளதால், கழிவுநீர் குழாய்கள் சேதாரமாகி உடைப்பு ஏற்பட்டுள்ளது. மேலும் பல வார்டுகளில் தொட்டிகள் **(Manhole)** மற்றும் அதன் மூடிகள் உடைப்பு ஏற்பட்டு கழிவுநீர் வெளியேறுவதால் சுகாதார சீர்கேடு ஏற்பட்டு பொதுமக்கள் மிகவும் சிரமத்துக்கு ஆளாவதாகவும், அதனை சரி செய்ய உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அனைத்து வார்டு உறுப்பினர்களும் தங்களது புகார் மனுவில் தெரிவித்துள்ளார்கள். அதனை தொடர்ந்து, பொதுசுகாதார நலன் கருதி கழிவுநீர் குழாய்கள், தொட்டிகள் மற்றும் அதன் மூடிகள் மாற்றி அமைக்க இந்நகராட்சிப் பொறியாளர்களால் ரூ.7,75,000/-க்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. அதற்குரிய செலவினங்கள் இந்நகராட்சி குடிநீர் வடிகால் நிதியிலிருந்து மேற்கொள்ள ஆணையாளரால் அறிவுறுத்தப்பட்டுள்ளதன்படி, மேற்காணும் பணியினை இந்நகராட்சி குடிநீர் வடிகால் நிதியிலிருந்து மேற்கொள்ளும் பொருட்டு மன்றத்தின் அனுமதிக்கு முன் வைக்கப்படுகிறது.

**(கோப்பு எண்.176/2022/.இ1)**

**<u>அலுவலக குறிப்பு</u>**

1) இந்நகர் பொதுசுகாதார நலன் கருதி பொறியாளர்களால் ரூ.7,75,000/-க்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டினை மன்றம் அங்கீகரிக்கலாம்.
2) இந்நகராட்சி குடிநீர் வடிகால் நிதியிலிருந்து செலவினங்கள் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மானம் எண்.: 38</u>** தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**<u>பொருள் : 16</u>**

கீழக்கரை நகராட்சிக்குட்பட்ட 21 வார்டுகளிலும் சாலை ஓரங்கள் மற்றும் பொது வீதிகளில் மழைநீர் வடிகால்கள் அமைக்கப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகிறது. தற்போது மழைநீர் வடிகால்கள் மற்றும் தொட்டி மூடிகள் பழுதுகள் ஏற்பட்டு பாதசாரிகள் வடிகால்களில் உள்ளே விழுந்து விடுவதாகவும், இப்பழுதுகளை சரிசெய்து கொடுக்குமாறு பொதுமக்களிடமிருந்து புகார் வந்த வண்ணம் உள்ளன. ஆகவே, இப்பழுதுகளை பொதுமக்கள் நலன் கருதி உடனடியாக சரிசெய்யும் பணிக்கு இந்நகராட்சிப் பொறியாளர்களால் ரூ. 9,50,000/-க்கு மதிப்பீடு தயார் செய்யப்பபட்டுள்ளது. அதற்குரிய செலவினங்கள் இந்நகராட்சி குடிநீர் வடிகால் நிதியிலிருந்து மேற்கொள்ள ஆணையாளரால் அறிவுறுத்தப்பட்டுள்ளதன்படி, மேற்காணும் பணியினை இந்கராட்சி

குடிநீர் வடிகால் நிதியிலிருந்து மேற்கொள்ளும் பொருட்டு மன்றத்தின் அனுமதிக்கு முன் வைக்கப்படுகிறது.

**(கோப்பு எண்.195/2022/.இ11)**

**<u>அலுவலக குறிப்பு</u>**

1) இந்நகர் பொதுசுகாதார நலன் கருதி பொறியாளர்களால் ரூ.9,50,000/-க்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டினை மன்றம் அங்கீகரிக்கலாம்.
2) இந்நகராட்சி குடிநீர் வடிகால் நிதியிலிருந்து செலவினங்கள் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மானம் எண்.: 39</u>** தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

<u>பொருள் : 17</u>

கீழக்கரை நகராட்சிக்குட்பட்ட 21 வார்டுகள் பொதுமக்களுக்கும், காவேரி கூட்டு குடிநீர் திட்டம் மற்றும் உள்ளூர் குடிநீர் திட்ட ஆதாரங்களாக விளங்கும் மாலாங்குண்டு குடிநீர் ஏற்றும் நிலையத்திலிருந்து, 21 வது வார்டு பகுதி மணல்மேட்டில் அமைந்துள்ள குடிநீர் மேல்நிலைத் தொட்டிக்கு நீரேற்றம் (Pumping) செய்யப்பட்டு இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளுக்கு தினமும் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. தற்போது குடிநீர் விநியோகம் செய்யும் குடிநீர் பகிர்மான குழாய்கள் குறுகிய சந்து பகுதியில் குடிநீர் குழாய் இல்லாமல் உள்ளதை அமைக்கவும் மற்றும் ஆங்காங்கே உடைப்பு ஏற்பட்டு குடிநீர் வீணாக சாலையில் செல்கிறது.

இதனால் பொதுமக்களிடமிருந்து புகார்கள் வந்த வண்ணம் உள்ளன. இதனை உடனடியாக சரி செய்யும் பொருட்டு இந்நகராட்சிப் பொறியாளர்களால் ரூ. 3,10,000/-க்கு மதிப்பீடு தயார் செய்யப்பபட்டுள்ளது. அதற்குரிய செலவினங்கள் இந்நகராட்சி குடிநீர் வடிகால் நிதியிலிருந்து மேற்கொள்ள ஆணையாளரால் அறிவுறுத்தப்பட்டுள்ளதன்படி, மேற்காணும் பணியினை இந்கராட்சி குடிநீர் வடிகால் நிதியிலிருந்து மேற்கொள்ளும் பொருட்டு மன்றத்தின் அனுமதிக்கு முன் வைக்கப்படுகிறது.

**(கோப்பு எண்.194/2022/.இ11)**

**<u>அலுவலக குறிப்பு</u>**

1) இந்நகர் பொதுமக்களின் குடிநீரின் அவசியத்தை கருத்தில் கொண்டு பொறியாளர்களால் ரூ.3,10,000/-க்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டினை மன்றம் அங்கீகரிக்கலாம்.
2) இந்நகராட்சி குடிநீர் வடிகால் நிதியிலிருந்து செலவினங்கள் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மானம் எண்.:</u> 40** தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**பொருள் : 18**

கீழக்கரை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.6 மீனாட்சிபுரம் பகுதிக்கு செல்லும் வழியில் உள்ள கழிவுநீர் குழாய் அடிக்கடி உடைப்பு ஏற்பட்டு கழிவுநீர் வெளியேறுவதால் சுகாதார சீர்கேடு ஏற்பட்டு பொதுமக்கள் மிகவும் சிரமத்துக்கு ஆளாவதாகவும், அதனை சரி செய்ய உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு நகர்மன்றத் தலைவர் அவர்கள், நகர்மன்ற துணைத்தலைவர் அவர்கள் மற்றும் 6வது வார்டு உறுப்பினர் அவர்களால் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதனடிப்படையில் வார்டு எண். 6 மீனாட்சிபுரம் செல்லும் சாலையில் இருந்து கிழக்குத் தெரு வரை ஆட்டோ ஸ்டாண்ட் வரை புதிய கழிவு நீர் குழாய் அமைத்து தொட்டிகள் **(Manhole)** மற்றும் அதன் மூடிகள் அமைக்க இந்நகராட்சிப் பொறியாளர்களால் ரூ.5,00,000/-க்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. அதற்குரிய செலவினங்கள் இந்நகராட்சி குடிநீர் வடிகால் நிதியிலிருந்து மேற்கொள்ள ஆணையாளரால் அறிவுறுத்தப்பட்டுள்ளதன்படி, மேற்காணும் பணியினை இந்நகராட்சி குடிநீர் வடிகால் நிதியிலிருந்து மேற்கொள்ளும் பொருட்டு மன்றத்தின் அனுமதிக்கு முன் வைக்கப்படுகிறது.

**(கோப்பு எண்.196/2022/.இ1)**

**அலுவலக குறிப்பு**

1) இந்நகர் பொதுசுகாதார நலன் கருதி பொறியாளர்களால் ரூ.5,00,000/-க்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டினை மன்றம் அங்கீகரிக்கலாம்.
2) இந்நகராட்சி குடிநீர் வடிகால் நிதியிலிருந்து செலவினங்கள் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.:** 41 தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**பொருள் : 19**

கீழக்கரை நகராட்சிக்குட்பட்ட கிழக்குத் தெரு பகுதியில் (ஆட்டோ ஸ்டாண்ட்) இருந்து கஸ்டம்ஸ் சாலை வரை கழிவுநீர் குழாய் அடிக்கடி உடைப்பு ஏற்பட்டு கழிவுநீர் வெளியேறுவதால் சுகாதார சீர்கேடு ஏற்பட்டு பொதுமக்கள் மிகவும் சிரமத்துக்கு ஆளாவதாகவும், அதனை சரி செய்ய உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு நகர்மன்றத் தலைவர் அவர்கள், நகர்மன்ற துணைத்தலைவர் அவர்கள் மற்றும் நகர்மன்ற உறுப்பினர்கள் ஆய்வின் போது நகர்மன்றத் தலைவர் அவர்களின் நேரடி உத்தரவில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதனடிப்படையில் கிழக்குத் தெரு பகுதியில் (ஆட்டோ ஸ்டாண்ட்) இருந்து கஸ்டம்ஸ் சாலை வரை புதிய கழிவு நீர் குழாய் அமைத்து தொட்டிகள் **(Manhole)** மற்றும் அதன் மூடிகள் அமைக்க இந்நகராட்சிப் பொறியாளர்களால்

ரூ.8,50,000/-க்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. அதற்குரிய செலவினங்கள் இந்நகராட்சி குடிநீர் வடிகால் நிதியிலிருந்து மேற்கொள்ள ஆணையாளரால் அறிவுறுத்தப்பட்டுள்ளதன்படி, மேற்காணும் பணியினை இந்நகராட்சி குடிநீர் வடிகால் நிதியிலிருந்து மேற்கொள்ளும் பொருட்டு மன்றத்தின் அனுமதிக்கு முன் வைக்கப்படுகிறது.

**(கோப்பு எண்.197/2022/.இ1)**

<u>அலுவலக குறிப்பு</u>

1) இந்நகர் பொதுசுகாதார நலன் கருதி பொறியாளர்களால் ரூ.5,00,000/-க்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டினை மன்றம் அங்கீகரிக்கலாம்.
2) இந்நகராட்சி குடிநீர் வடிகால் நிதியிலிருந்து செலவினங்கள் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மானம் எண்.:</u>** <u>42</u> தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

<u>பொருள் : 20</u>

கீழக்கரை நகராட்சிக்குட்பட்ட பிரதான சாலையாக உள்ள வள்ளல் சீதக்காதி சாலையில் (நடுத்தெரு முதல் பழைய பேருந்து நிலையம் வரை) கழிவுநீர் கால்வாய் அடிக்கடி உடைப்பு ஏற்பட்டு கழிவுநீர் வெளியேறுவதால் சுகாதார சீர்கேடு ஏற்பட்டு பொதுமக்கள் மிகவும் சிரமத்துக்கு ஆளாவதாகவும், அதனை சரி செய்ய உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு நகர்மன்றத் தலைவர் அவர்கள், நகர்மன்ற துணைத்தலைவர் அவர்கள் மற்றும் நகர்மன்ற உறுப்பினர்கள் ஆய்வின் போது நகர்மன்றத் தலைவர் கோரிக்கை வைக்கப்பட்டுள்ளது. அதனடிப்படையில் வள்ளல் சீதக்காதி சாலையில் (நடுத்தெரு முதல் பழைய பேருந்து நிலையம் வரை) வாறுகால் உயர்த்தி கட்டி, தொட்டிகள் **(Manhole)** மற்றும் அதன் மூடிகள் அமைக்க இந்நகராட்சிப் பொறியாளர்களால் ரூ.5,50,000/-க்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. அதற்குரிய செலவினங்கள் இந்நகராட்சி குடிநீர் வடிகால் நிதியிலிருந்து மேற்கொள்ள ஆணையாளரால் அறிவுறுத்தப்பட்டுள்ளதன்படி, மேற்காணும் பணியினை இந்கராட்சி குடிநீர் வடிகால் நிதியிலிருந்து மேற்கொள்ளும் பொருட்டு மன்றத்தின் அனுமதிக்கு முன் வைக்கப்படுகிறது.

**(கோப்பு எண்.198/2022/.இ1)**

<u>அலுவலக குறிப்பு</u>

1) இந்நகர் பொதுசுகாதார நலன் கருதி பொறியாளர்களால் ரூ.5,50,000/-க்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டினை மன்றம் அங்கீகரிக்கலாம்.
2) இந்நகராட்சி குடிநீர் வடிகால் நிதியிலிருந்து செலவினங்கள் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மானம் எண்.:</u>** <u>43</u> தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**பொருள் : 21**

கீழக்கரை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.9 வடக்குத் தெரு பள்ளிவாசல் அருகில் உள்ள குறுக்குச்சாலை மற்றும் வார்டு எண். 8 தெற்குத் தெரு பள்ளிவாசல் பின்புறம் உள்ள குறுக்கு தெருக்களில் உள்ள மண்சாலைகளில் பேவர் பிளாக் சாலையாக மாற்றித் தருமாறு 8வது வார்டு உறுப்பினர் மற்றும் 9வது வார்டு உறுப்பினர் அவர்களால் கோரப்பட்டுள்ளது. அதன்படி மேற்காணும் வார்டுகளில் பேவர் பிளாக் சாலையாக மாற்றுவதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு இந்நகர்மன்ற தலைவர் அவர்களால் உத்தரவிடப்பட்டுள்ளது. அதனடிப்படையில் பேவர் பிளாக் சாலைகள் அமைக்க இந்நகராட்சிப் பொறியாளர்களால் ரூ.9,50,000/-க்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. அதற்குரிய செலவினங்கள் இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள ஆணையாளரால் அறிவுறுத்தப்பட்டுள்ளதன்படி, மேற்காணும் பணியினை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளும் பொருட்டு மன்றத்தின் அனுமதிக்கு முன் வைக்கப்படுகிறது.

**(கோப்பு எண். 199 /2022/.இ1)**

**அலுவலக குறிப்பு**

1) இந்நகராட்சி பொறியாளர்களால் ரூ.9,50,000/-க்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டினை மன்றம் அங்கீகரிக்கலாம்.
2) இந்நகராட்சி வருவய் நிதியிலிருந்து செலவினங்கள் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.:** 44 தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**பொருள் : 22**

அரசாணை (நிலை) எண்.**79**, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழஙகல் (மா.ந.**2**) துறை, நாள்.**31.05.2013** மற்றும் அரசாணை (நிலை) எண்.**118**, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழஙகல் (மா.ந.**2**) துறை, நாள்.**26.09.2014**–ல் தெரிவித்துள்ளதன்படி, இந்நகராட்சி அம்மா உணவகஙகளுக்குத் தேவைப்படும் காய்கறி வகைகளை அன்றாடம் வெளிச்சந்தை விலையில் **01.05.2022** முதல் **30.04.2023** வரை ஒரு வருடத்திற்கு மட்டும் விநியோகம் செய்வதற்கு இவ்வலுவலக ந.க.எண். 187/ இ1/2020 நாள். 11.04.2022-ன்படி விலைப்புள்ளி கோரப்பட்டதில் **25.04.2022**ந் தேதி கீழ்காணும் விவரப்படி மூன்று விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. அதன்படி ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு இந்நகராட்சி பொறுப்பு அலுவலரால் (Nodal Officer) பரிந்துரை செய்யப்பட்டுள்ளது மன்றத்தின் பரிசீலனைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | பொருட்கள் விபரம் | விலை விகிதம் | எஸ்.எம். ஜகுபர் சாதிக், எஸ்.எம். காய்கறி கடை, இந்து பஜார் கீழக்கரை | எஸ். ஜாஹிர் உசேன், காய்கறி வியாபாரம், இந்து பஜார், கீழக்கரை | கே. வசந்த பூபதி காய்கறி வியாபாரம், இந்து பஜார், கீழக்கரை |
|---|---|---|---|---|---|
| 1 | வெள்ளைப் பூசணிக்காய் / முள்ளங்கி | (கிலோ ஒன்றுக்கு) | 68 | 72 | 70 |
| 2 | சின்னவெங்காயம் | (கிலோ ஒன்றுக்கு) | 70 | 74 | 72 |
| 3 | பெரிய வெங்காயம் | (கிலோ ஒன்றுக்கு) | 70 | 74 | 72 |
| 4 | தக்காளி | (கிலோ ஒன்றுக்கு) | 70 | 74 | 72 |
| 5 | கேரட் | (கிலோ ஒன்றுக்கு) | 80 | 83 | 81 |
| 6 | கத்திரிக்காய் | (கிலோ ஒன்றுக்கு) | 70 | 72 | 72 |
| 7 | உருளை கிழங்கு | (கிலோ ஒன்றுக்கு) | 65 | 67 | 67 |
| 8 | பீன்ஸ் | (கிலோ ஒன்றுக்கு) | 100 | 104 | 102 |
| 9 | கருவேப்பிலை,மல்லி | (கிலோ ஒன்றுக்கு) | 120 | 124 | 122 |
| 10 | பச்சைமிளகாய் | (கிலோ ஒன்றுக்கு) | 96 | 99 | 94 |
| 11 | இஞ்சி | (கிலோ ஒன்றுக்கு) | 100 | 104 | 101 |
| **மொத்தம்** | | | **909** | **947** | **925** |

**(கோப்பு எண். 187 /2020/இ1)**

**<u>அலுவலக குறிப்பு</u>**

1. மேற்கண்ட விலைப்புள்ளிகளில் வ.எண்.1 முதல் 11 வரையிலான ஒட்டு மொத்த இனங்களுக்கு குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள எஸ்.எம்.ஜகுபர் சாதிக், எஸ்.எம். காய்கறி கடை, கீழக்கரை விலைப் புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம்.
2. இந்நகராட்சி அம்மா உணவகத்திற்குத் தேவையான காய்கறி வகைகளை 01.05.2022 முதல் 30.04.2023 வரை ஒரு வருடத்திற்கு மேற்கண்ட விலை விகிதத்தில் விநியோகம் செய்வதற்கு மன்றம் அனுமதிக்கலாம்.
3. இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவினங்களை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மானம் எண்.: 45</u>** முன் அனுமதி வழங்கி தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**பொருள் : 23**

கீழக்கரை நகராட்சிக்கு 15வது மத்திய நிதிக்குழு ஆணைய பரிந்துரையின்படி (Un Tied Grant) 2021-2022 ஆம் ஆண்டு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்ட மானியத்தில் இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.19 மற்றும் வார்டு எண்.20 வடக்குத் தெரு பகுதியில் பழுதடைந்துள்ள தார் சாலையில் புதிதாக தார்சாலை அமைக்கும் பணி **(Paver Finisher)** (Unicode-133020R037) ரூ.50.00 இலட்சம் மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ள இந்நகர்மன்றத்தில் 05.01.2021ந் தேதி அனுமதி பெறப்பட்டுள்ளது. அதன்படி மேற்காணும் பணிக்கு 15.03.2022 தேதி மின்னணு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு விளம்பரம் தினத்தந்தி நாளிதழில் 27.02.2022 தேதி தமிழ் தினசரி நாளிதழில் மாவட்ட அளவில் பிரசுரம் செய்யப்பட்டதற்கான விளம்பரக் கட்டணம் ரூ. 24,948/- க்குரிய பட்டியல் எண்.2122MDU211012302 நாள்.27.02.2022ன்படியானது இந்நகராட்சிக்கு 07.03.2022---ந் தேதி வரப்பெற்றுள்ளது.

மேற்காணும் ஒப்பந்தப்புள்ளி விளம்பர கட்டணம் ரூ. 24,948/- மட்டும் தினத்தந்தி, மதுரை நிறுவனத்திற்கு வழங்குவதற்கு மன்றத்தின் அனுமதிக்கு முன் வைக்கப்படுகிறது.

**(கோப்பு எண். 610-1/.2020/.இ1)**

**அலுவலக குறிப்பு**

விளம்பர கட்டணம் ரூ. 24,948/- யை தினத்தந்தி, மதுரை நிறுவனத்திற்கு இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.: 46** தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**பொருள் : 24**

கீழக்கரை நகராட்சிக்கு உட்பட்ட **21** வார்டு அனைத்து பகுதிகளிலும் திடக்கழிவு மேலாண்மை மற்றும் கழிவுநீர் வாறுகால் சுத்தம் செய்தல் போன்ற பணிகளுக்கு தனியார் மூலம் **55** பணியாளர்களை கொண்டு பணிகள் செய்ய இந்நகராட்சியால் வழஙகப்பட்ட உத்திரவின்படி, பணிக்காலம் **02.05.2022–**தேதி உடன் முடிவடைவதால் காலநீட்டிப்பு செய்து உத்திரவு வழஙக கோரி M/S.Exsernet. S.M.M.காம்ளாக்ஸ், கல்பாலம் ரோடு, கோரிப்பாளயம்,மதுரை-2. நிறுவனத்தின் கடிதத்தில் வேண்டப்பட்டுள்ளது**.** மேற்படி, நிறுவனத்திற்கு பொதுசுகாதார பணிகளின் அவசர அவசியம் கருதி **03.05.2022** முதல் **02.08.2022** வரை மூன்று மாத காலத்திற்கு பணிநீட்டிப்பு செய்து உத்திரவு வழஙகவும், அதற்கான உத்தேச செலவினம் ரூ**.50.00** இலட்சத்திற்கும் நகர்மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது**.**

**(ந.க.எண்.எச்1 /1528/2018)**

**அலுவலக குறிப்பு**

கீழக்கரை நகராட்சி 21 வார்டு பகுதிகளில் தனியார் மூலம் குப்பைகள் சேகரிக்கும் பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோர அனுமதி கோரிய கருத்துரு நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் அலுவலகத்தில் நிலுவையில் உள்ளதால், பொது சுகாதார பணிகளின் அவசர அவசியம் கருதி 03.05.2022 முதல் 02.08.2022 வரை மூன்று மாத காலத்திற்கு பணிநீட்டிப்பு செய்து உத்திரவு வழஙகவும், அதற்கான உத்தேச செலவினம் ரூ.50.00 இலட்சத்திற்கும் நகர்மன்றத்தின் முன் அனுமதியினை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மானம் எண்.:</u>** 47

8வது வார்டு, 18வது வார்டு உறுப்பினர்கள் எதிர்ப்பு. தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**<u>பொருள் : 25</u>**

கீழக்கரை நகராட்சிக்கு உட்பட்ட வார்டு எண். 01 முதல் 11 வரை உள்ள பகுதிகளில் திடக்கழிவு மேலாண்மை மற்றும் கழிவுநீர் வாறுகால் சுத்தம் செய்தல் போன்ற பணிகளுக்கு தனியார் மூலம் 25 பணியாளர்களை கொண்டு பணிகள் செய்ய இந்நகராட்சியால் வழஙகப்பட்ட உத்திரவின்படி, பணிக்காலம் 11.05.2022–தேதி உடன் முடிவடைவதால் காலநீட்டிப்பு செய்து உத்திரவு வழஙக கோரி M/S.Exsernet. S.M.M.காம்ளாக்ஸ், கல்பாலம் ரோடு, கோரிப்பாளயம்,மதுரை-2. நிறுவனத்தின் கடிதத்தில் வேண்டப்பட்டுள்ளது. மேற்படி, நிறுவனத்திற்கு பொதுசுகாதார பணிகளின் அவசர அவசியம் கருதி 12.05.2022 முதல் 11.08.2022 வரை மூன்று மாத காலத்திற்கு பணிநீட்டிப்பு செய்து உத்திரவு வழஙகவும், அதற்கான உத்தேச செலவினம் ரூ.25.00 இலட்சத்திற்கும் நகர்மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**(ந.க.எண்.எச்1 /1528/2018)**

<u>அலுவலக குறிப்பு</u>

கீழக்கரை நகராட்சி வார்டு எண். 01 முதல் 11 வரை உள்ள பகுதிகளில் தனியார் மூலம் குப்பைகள் சேகரிக்கும் பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோர அனுமதி கோரிய கருத்துரு நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் அலுவலகத்தில் நிலுவையில் உள்ளதால், பொது சுகாதார பணிகளின் அவசர அவசியம் கருதி 12.05.2022 முதல் 11.08.2022 வரை மூன்று மாத காலத்திற்கு பணிநீட்டிப்பு செய்து உத்திரவு வழஙகவும், அதற்கான உத்தேச செலவினம் ரூ.25.00 இலட்சத்திற்கும் நகர்மன்றத்தின் முன் அனுமதியினை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மானம் எண்.:</u>** 48 தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**பொருள் : 26**

கீழக்கரை நகராட்சி வார்டு பகுதிகளில் சேகரமாகும் குப்பைகளை வாகனங்கள் மூலம் பள்ளமோர்குளம் பகுதியில் உள்ள இந்நகராட்சி உரக்கிடங்கில் கொட்டப்பட்டு வருகிறது. அப்பகுதியில் தேங்கியுள்ள குப்பைகளை 'Hitachi Chain Dosar' இயந்திரத்தினை பயன்படுத்தி உடன் உடன் அகற்றப்பட வேண்டும். அகற்றி பணியினை உள்ளூர் ஒப்பந்தப்புள்ளி பெற்று மேற்கொள்ளவும், அதற்கான உத்தேச செலவினம் ரூ.3.00 இலட்சத்திற்கு நகர்மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

பொதுசுகாதார பணிகளின் அவசர அவசியம் நகர்மன்றத்தின் முன் அனுமதியினை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.:** 49 தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**பொருள் : 27**

கீழக்கரை நகராட்சியில் பணிபுரியும் பணியாளர்கள் அலுவலக வேலை நிமித்தமாக வெளியூர் சென்று வர வேண்டியுள்ளது. அவ்வாறு பயணங்கள் மேற்கொள்ளும் பணியாளர்களுக்கு பயணப்படி தொகை வழங்க 2022-2023ம் ஆண்டிற்கு உத்தேச செலவின தொகை ரூ.5.00 இலட்சத்திற்கு நகர்மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்கள் மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், மதுரை அவர்களின் ஆய்வு கூட்டங்களில் கலந்து கொள்ள மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் ஆய்வு கூட்டங்களில் கலந்து கொள்ள வெளியூர் சென்று வர வேண்டி இருப்பதால் நகர்மன்றத்தின் முன் அனுமதியினை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று பயணப்படி தொகைக்கான செலவினம் மேற்கொள்வதை மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.:** 50 தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**பொருள் : 28**

கீழக்கரை நகராட்சியில் அலுவலக உதவியாளராக பணிபுரியும் திரு.கே. இரமேஷ்குமார் என்பவர் தன்னுடைய குடும்ப சூழ்நிலையின் காரணமாக தனது சொந்த ஊரான திருவாரூர் மாவட்டத்தில் உள்ள ஏதேனும் ஒரு நகராட்சியில் காலியாக உள்ள அலுவலக உதவியாளர் பணியிடத்திற்கு பணியிட மாறுதல் கோரியதை பரிந்துரை செய்ய நகர்மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மேற்படி பணியாளரின் குடும்ப சூழ்நிலை காரணமாக பணியிட மாறுதல் கோரியதை பரிந்துரை செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.:** 51 தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**பொருள் : 29**

கீழக்கரை நகராட்சி ஆணையாளர் அவர்களை 1-ம் பிரதிவாரியாக சேர்த்து திரு. K.தேவதாஸ் மற்றும் திருமதி. D.சாந்தி என்பவர் சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளையில் தொடரப்பட்ட வழக்கு எண். WP (MD) No. 14166/2021 ல் கீழக்கரை நகராட்சி சார்பில் வக்காலத் தாக்கல் செய்து எதிர்வாதுரை தயார் செய்து தாக்கல் செய்ததற்கு இந்நகராட்சி நகர்மன்ற வழக்கறிஞர் திரு. A. கண்ணன் அவர்களுக்கு வழக்கு கட்டணமாக ரூ.15,000/- வழங்க நகர்மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

நீதிமன்ற வழக்குகளின்படி அவசர அவசியம் கருதி நகர்மன்றத்தின் முன் அனுமதியினை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று செலவினம் மேற்கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.:** 52 தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**பொருள் : 30**

மதுரை மண்டல, தொழிலாளர் வருங்கால வைப்புநிதி அலுவலகத்திலிருந்து வரப்பெற்ற ஜப்தி நோட்டீஸ் (RRc No. MDMDU9904/00091171/04/04/2017/501/35 நாள். 04.04.2017) நாள். 25.03.2022ன் பேரில் கீழக்கரை நகராட்சி சார்பில் மதுரை, தொழிலாளர் வருங்கால வைப்புநிதி அலுவலகத்தில் ஆஜராகி சட்டப்படியான பதிலறிக்கை தாக்கல் செய்ததற்கு இந்நகராட்சி நகர்மன்ற வழக்கறிஞர் திரு. A. கண்ணன் அவர்களுக்கு ரூ.5,000/- வழங்க நகர்மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

நீதிமன்ற வழக்குகளின்படி அவசர அவசியம் கருதி நகர்மன்றத்தின் முன் அனுமதியினை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று செலவினம் மேற்கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.: 53** தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**பொருள் : 31**

கீழக்கரை நகராட்சி பகுதிகளில் இராமநாதபுரம் சட்டமன்ற உறுப்பினர் அவர்களின் 14.05.2022 ந் தேதிய திட்டப்பணிகள் குறித்து நேரடி கள ஆய்வின் போது, நகர்மன்ற தலைவர் மற்றும் நகர்மன்ற உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்களின் தொடர் புகாரின் பேரில் மற்றும், இந்நகராட்சி பொறியாளர் அவர்களின் அறிக்கையின்படி, கீழக்கரை நகராட்சிக்குட்பட்ட தட்டான்தோப்பு மற்றும் மாட்டுக் கொட்டகை பகுதிகளில் இயங்கி வரும் கழிவுநீர் உந்து நிலையத்திலிருந்து வள்ளல் சீதக்காதி சாலை (பழைய பேருந்து நிலையம்) வரை புதிய 200 mm விட்டமுள்ள DI குழாய் K7 கழிவுநீர் உந்து குழாய்கள் ஒரே குழாய் மூலம் பொதுமக்களுக்கு இடையூறு இல்லாமல் கழிவுநீர் வெளியேற்றம் செய்யும் பணி ரூ. 50.00 இலட்சம் மதிப்பீட்டில் அரசு திட்டத்தின் கீழ் அரசின் முழு மானியமாக தொகை வழங்கும் பொருட்டு, நிர்வாக அனுமதி வழங்க வேண்டி கருத்துரு சென்னை நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களுக்கு சமர்ப்பிக்க மன்றத்தின் பார்வைக்கு முன் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | திட்ட மதிப்பீடு (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|
| 1. | கீழக்கரை நகராட்சிக்குட்பட்ட தட்டான்தோப்பு மற்றும் மாட்டுக் கொட்டகை பகுதிகளில் இயங்கி வரும் கழிவுநீர் உந்து நிலையத்திலிருந்து வள்ளல் சீதக்காதி சாலை (பழைய பேருந்து நிலையம்) வரை புதிய 200 mm விட்டமுள்ள DI குழாய் K7 கழிவுநீர் உந்து குழாய்கள் அமைக்கும் பணி. | 50.00 |

**(கோப்பு எண்.225/2022/இ1)**

**அலுவலகக் குறிப்பு:**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணியினை அரசிடம் முழு மானியமாக நிதி பெற்று மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
3. கூடுதலான செலவினத்தை இந்நகராட்சி வருவாய் நிதி 2022–23 ன் கீழ் மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் எண்.: 54** தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**பொருள் : 32**

கீழக்கரை நகராட்சி பகுதிகளில் இராமநாதபுரம் சட்டமன்ற உறுப்பினர் அவர்களின் 14.05.2022 ந் தேதிய திட்டப்பணிகள் குறித்து நேரடி கள ஆய்வின் போது, நகர்மன்ற தலைவர் மற்றும் நகர்மன்ற உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்களின் கோரிக்கையின் பேரில் மற்றும், இந்நகராட்சி பொறியாளர் அவர்களின் அறிக்கையின்படி, கீழக்கரை நகராட்சிக்குட்பட்ட புதிய வார்டு எண். 21 (பழைய வார்டு எண்.3) சர்வே எண்.419–2 பழைய உரக்கிடங்கில் பழைய குப்பைகளை பயோமைனிங் திட்டத்தின் மூலம் அகற்றப்பட்ட இடத்தில் தற்போது பணிகள் முடிவுற்ற நிலையில் தற்போது புதிய பூங்கா அமைக்கும் பணிக்கு ரூ.50.00 இலட்சம் மதிப்பீட்டில் அரசு திட்டத்தின் கீழ் அரசின் முழு மானியமாக தொகை வழங்கும் பொருட்டு, நிர்வாக அனுமதி வழங்க வேண்டி கருத்துரு சென்னை நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களுக்கு சமர்ப்பிக்க மன்றத்தின் பார்வைக்கு முன் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | திட்ட மதிப்பீடு (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|
| 1. | கீழக்கரை நகராட்சிக்குட்பட்ட புதிய வார்டு எண். 21 (பழைய வார்டு எண்.3) சர்வே எண்.419–2 பழைய உரக்கிடங்கில் பழைய குப்பைகளை பயோமைனிங் திட்டத்தின் மூலம் அகற்றப்பட்ட இடத்தில் தற்போது பணிகள் முடிவுற்ற நிலையில் தற்போது புதிய பூங்கா அமைக்கும் பணி | 50.00 |

**(கோப்பு எண்.225/2022/இ1)**

**அலுவலகக் குறிப்பு:**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணியினை அரசிடம் முழு மானியமாக நிதி பெற்று மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
3. கூடுதலான செலவினத்தை இந்நகராட்சி வருவாய் நிதி 2022–23 ன் கீழ் மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் எண்.:** 55 தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**பொருள் : 33**

இந்நகராட்சியில் 2021–2022ம் ஆண்டு நடைபெற்ற திட்டப்பணிகள் மற்றும் இதரப்பணிகளில் ஒப்பந்ததாரர்கள், சப்ளைதாரர் மற்றும் இதர நிறுவனங்களிடம் பிடித்தம் செய்யப்பட்ட வருமான வரி (Income Tax) மற்றும் சரக்கு மற்றும் சேவை வரி (GST) பிடித்தங்களை அரசு தலைப்பில் செலுத்தப்பட்டதற்கு M/s. ஆலயம் அசோஸியேட்ஸ் எண்.1, என்.எஸ்.காம்பளக்ஸ் 3வது மாடி, சத்திரம் பேருந்து நிலையம், திருச்சி–2 நிறுவனம் மூலம் கீழ்காணும் விபரப்படியான பணிகள் செய்து கொடுத்த வகைக்கு கட்டணம் ரூ.40,500/– மட்டும் வழங்கக் கோரி 18.03.2022–ந் தேதி பட்டியல் பெறப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| 1 | E- Filing TDS Return contractors and staff salary records as 26Q & 24Q Fomat uploading and processing fees. | 19500 |
| 2 | GSTR 7A TDS Return filing fees (2021-22) | 13500 |
| 3 | Contractors certificate downloading and staff salary certificate processing and downloading fees | 7500 |
| | **மொத்தம்** | **40500** |

இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கண்ட விபரப்படியான கட்டணம் ரூ. 40,500/– மட்டும் வழங்கும் பொருட்டு இந்நகர் மன்றத்தில் அனுமதி வேண்டப்படுகிறது.

**(கோப்பு எண். 132/2022/இ1)**

<u>அலுவலக குறிப்பு</u>

இந்நகராட்சி நிர்வாக நலனை கருத்தில் கொண்டு வருமானவரி மற்றும் சரக்கு மற்றும் சேவை வரி பிடித்தங்கள் கணினியில் E-TDS Return Filing -Online processing செய்து கொடுத்த வகைக்கு ரூ.40,500/– மட்டும் இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலுத்த மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மானம் எண்.</u>**: <u>56 </u>தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**<u>பொருள் : 34</u>**

இந்நகராட்சிக்கு நமக்கு நாமே திட்டம் 2021–2022 ன் கீழ் ரூ.12.30 இலட்சத்திற்கு மேலத்தெரு மற்றும் அதை சேர்ந்த பகுதிகளில் 3 எண்ணம் சிறுமின் கோபுர விளக்கு (LED Mini mast Stand) அமைக்கும் பணி மேற்கொள்ளும் பொருட்டு இந்நகர் மன்றத்தில் 10.01.2022–ந் தேதி அனுமதி பெறப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் சென்னை நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் செயல்முறை ந.க.எண்.27519–36/2021–பி2, நாள்.30.03.2022ன்படி மேற்காணும் பணிகள் செய்வதற்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு 17.05.2022ந் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. அன்று வரப்பெற்ற கீழ்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளுக்கு இந்நகராட்சி பொறியாளர்களால் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்து பரிந்துரை செய்யப்பட்டுள்ளது மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | திட்டம்/ வேலையின் விபரம் | மதிப்பீடு (இலட்சத்தில்) | ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரரின் பெயர் | சதவீதம் |
|---|---|---|---|---|
| **<u>நமக்கு நாமே திட்டம் 2021–2022</u>** | | | | |
| 1. | Supply, delivery and erection of Minimast (12 Meter) with 6 Nos 150W LED Fitting in 3 places at Mela street ward no.15 | 12.30 | M/s. Kavi Kalidass APJAK Infra Pvt. ltd 29/C3–பாரதி நகர், இராமேஸ்வரம்–623526 இராமநாதபுரம் மாவட்டம் | ரூ. 12,17,460/– மதிப்பீட்டு தொகையை விட 0.01% குறைவு |
| | | | திரு.ஆர்.உத்தண்டி 1/556A நேருநகர், 9வது தெரு, இராமநாதபுரம் | ரூ. 12,18,300/– மதிப்பீட்டு தொகையை விட 0.06% அதிகம் |

**<u>(கோப்பு எண். 623/2021/இ1)</u>**

<u>அலுவலகக் குறிப்பு:</u>

மேற்கண்டவாறு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு தொகையை விட குறைவாக ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரர் M/s. Kavi Kalidass APJAK Infra Pvt. ltd நிறுவனத்திற்கு 18.05.2022ந் தேதி மேற்காணும் பணிக்கு பணி உத்திரவு வழங்கப்பட்டுள்ளதையும், மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மானம் எண்.</u>**: <u>57 </u>தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**பொருள் : 35**

இந்நகராட்சிக்கு DAY NULM SUSV Vending Plan 2022 ன் கீழ் ரூ.13.14 இலட்சத்திற்கு இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் சாலையோரமாக வியாபாரம் செய்யும் வியாபாரிகளுக்கு, விற்பனை வண்டிகள் கொள்முதல் செய்து சாலையோர வியாபாரிகளுக்கு வழங்கும் பணிகள்மேற்கொள்ளும் பொருட்டு நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் செயல்முறை ந.க.எண்.20789/2021/UPA1நாள். 29.03.2022ன்படி நிர்வாக அனுமதி வழங்கப்பட்டது. அதன் அடிப்படையில் மேற்காணும் பணிகள் செய்வதற்கு 13.05.2022–ந் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. அன்று வரப்பெற்ற கீழ்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளுக்கு இந்நகராட்சி பொறியாளர்களால் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்து பரிந்துரை செய்யப்பட்டுள்ளது மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | திட்டம்/ வேலையின் விபரம் | மதிப்பீடு (இலட்சத்தில்) | ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரரின் பெயர் | சதவீதம் |
|---|---|---|---|---|
| **DAY NULM SUSV Vending Plan 2022** | | | | |
| 1. | கீழக்கரை நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் சாலையோரமாக வியாபாரம் செய்யும் வியாபாரிகளுக்கு, விற்பனை வண்டிகள் கொள்முதல் செய்து சாலையோர வியாபாரிகளுக்கு வழங்கும் பணிகள் | 13.14 | திரு. எஸ். முனியசாமி, ஒப்பந்ததாரர், 23A மாரியம்மன் கோவில் தெரு, இராமநாதபுரம் | ரூ. 13,13,700/– மதிப்பீட்டு தொகையை விட 0.02% குறைவு |
| | | | M/s.AKB ராஜா என்டர்பிரைசஸ், 1/21 பி82 காதர் மீரான் நகர், தெர்மல்நகர், தூத்துக்குடி. | ரூ. 14,13,000/– மதிப்பீட்டு தொகையை விட 7.53% அதிகம் |

**(கோப்பு எண். 594/2014/எச்1)**

**அலுவலகக் குறிப்பு:**

மேற்கண்டவாறு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு தொகையை விட குறைவாக ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரர் திரு. எஸ். முனியசாமி இராமநாதபுரம் என்பவருக்கு 16.05.2022ந் தேதி மேற்காணும் பணிக்கு பணி உத்திரவு வழங்கப்பட்டுள்ளதையும், மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.: 58** தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**பொருள் : 36**

கோயம்புத்தூர், தமிழ்நாடு நகரியல் பயிற்சி மைய இயக்குநர் அவர்களின் கடிதம் ந.க.எண்.276/2020/A2 நாள்.30.03.2020–ன்படி கீழக்கரை நகராட்சியிலிருந்து 2021–22 ஆம் ஆண்டு சந்தா (Annual Contribution) ரூ.30,000/–ஐ செலுத்தக் கோரி கேட்பு வரப்பெற்றுள்ளது. அதனடிப்படையில் கோயம்புத்தூர், தமிழ்நாடு நகரியல் பயிற்சி மையத்திற்கு இந்நகராட்சியின்

சார்பாக செலுத்த வேண்டிய ஆண்டு சந்தா (Annual Contribution) ரூ.30,000/—ஐ செலுத்துவதற்கு மன்றத்தின் ஒப்புதலுக்கு முன் வைக்கப்படுகிறது.

**(ந.க.எண்.239/2019/சி1)**

**<u>அலுவலகக் குறிப்பு:</u>**

கோயம்புத்தூர், தமிழ்நாடு நகரியல் பயிற்சி மையத்திற்கு இந்நகராட்சியின் சார்பாக செலுத்த வேண்டிய ஆண்டு சந்தா (Annual Contribution) ரூ.30,000/— இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவினங்கள் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மானம் எண்.</u>**: <u>59</u> தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**<u>பொருள் : 37</u>**

இந்நகராட்சி TN65 S 4101 பொலிரோ வாகனத்தின் செயல் திறன் குறைந்துள்ளதால், பழுதுகள் பார்க்க வேண்டி உள்ளது என இந்நகராட்சி ஈப்பு ஓட்டுநரால் 22.04.2022—ந் தேதி அனுமதி கோரப்பட்டுள்ளது. மேலும், இந்நகராட்சி பொறியாளரால் வாகனத்தினை ஆய்வு செய்து அறிக்கையின்படி, வாகனத்தில் உள்ள பழுதுகளை சரி செய்யும் பொருட்டு பிரசன்னா ஆட்டோ மொபைல்ஸ், மதுரை நிறுவனத்திடம் பழுதுகளை சரி செய்ய வாகனத்தினை ஒப்படைத்து வர தெரிவிக்கப்பட்டது. அதனை தொடர்ந்து, ஆணையாளர் அனுமதியின்படி, இந்நகராட்சி ஈப்பு ஓட்டுநரால் 20.05.2022 அன்று மேற்காணும் நிறுவனத்தில் வாகனம் ஒப்படைத்து வரப்பட்டது. மேலும், நகராட்சி ஆணையாளர் மற்றும் பொறியாளர்கள் உயர் அலுவலர்களின் ஆய்வுக் கூட்டங்களுக்கு சென்று வருவதற்கும், பிற முக்கிய பணிகளை ஆய்வு செய்ய செல்வதற்கும் மிகவும் சிரமமாக இருப்பதால், அலுவலக ஈப்பு வாகனம் பழுது நீக்கம் செய்து இவ்வலுவலகத்தில் ஒப்படைப்பு செய்யும் வரை ஆணையாளர் அலுவலக பணி பயன்பாட்டிற்கு வாகனம் தேவைப்படுவதால், இந்நகராட்சி பொறியாளர்களால் உள்ளூர் விலைப்புள்ளி பெற்று தனியார் வாகனம் வாடகைக்கு எடுத்து பயன்படுத்த ஆணையாளர் அவர்களால் தெரிவிக்கப்பட்டுள்ளதற்கிணங்க, அதனை தொடர்ந்து 23.05.2022—ந் தேதி விலைப்புள்ளி கோரப்பட்டதில், வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகள் இந்நகராட்சி பொறியாளர்களால் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு பரிந்துரை செய்யப்பட்டுள்ளது இந்நகர்மன்றத்தின் அனுமதிக்காக முன் வைக்கப்படுகிறது.

| வ.எண். | ஒப்பந்தகாரர் / நிறுவனத்தின் பெயர் | விலையின் விகிதம் |
|---|---|---|
| 1 | சிவா டிராவல்ஸ்,<br>21/52 தட்டான்தோப்பு மெயின் ரோடு,<br>கீழக்கரை<br>(வாகனம் எண். TN02 AX 1777) | நாளொன்றுக்கு<br>ரூ.1,500/—<br><br>(FAST TAG தனி – பயன்பாட்டினை பொருத்து) |
| 2 | வின்யா டிராவல்ஸ்<br>7/35 பாரதி நகர்,<br>கீழக்கரை<br>(வாகனம் எண். TN06-J- 2727) | நாளொன்றுக்கு<br>ரூ.1,800/—<br><br>(FAST TAG தனி – பயன்பாட்டினை பொருத்து) |
| 3 | ராஜ் டிராவல்ஸ்<br>7/63, சின்னமாயாகுளம்<br>கீழக்கரை<br>(வாகனம் எண். TN55- AH5114) | நாளொன்றுக்கு<br>ரூ.2,000/—<br><br>(FAST TAG தனி – பயன்பாட்டினை பொருத்து) |

**(ந.க.எண்.202/2022/இ1)**

**<u>அலுவலகக் குறிப்பு:</u>**

1. மேற்கண்ட விலைப்புள்ளிகளில் ரூ.1,500/—க்கு குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள சிவா டிராவல்ஸ், கீழக்கரை குறைந்த விலைப்புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம்.
2. இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மானம் எண்.:</u>** <u>60</u> முன் அனுமதி வழங்கி தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**<u>பொருள் : 38</u>**

கீழக்கரை நகராட்சிப் பகுதியில் உள்ள வார்டு எண். 13, சொக்கநாதர் கோவில் அருகில், வார்டு எண்.17 சாலைத்தெரு செல்லும் வழியில் மற்றும் வார்டு எண்.21 பழைய உரக்கிடங்கு பின்புறம் ஆகிய பகுதிகளில் உரிய முறையில் குப்பைகள் வீடு வீடாக சென்று பெற்றுவரும் நிலையில், மேற்காணும் இடங்களில் அப்பகுதி மக்களால் குப்பைகள் அதிகளவில் கொட்டப்பட்டு வருகிறது. இதனால் குப்பைகள் அதிகளவில் தேங்கி பொதுசுகாதார சீர் கேடு ஏற்படுவதுடன், நோய் தொற்று ஏற்படவும் வாய்ப்புள்ளது. மேலும், இது குறித்து அப்பகுதி பொதுமக்களிடமிருந்து அடிக்கடி புகார் வரப்பெற்ற நிலையில், அப்பகுதி மக்களின் கோரிக்கையை ஏற்று நகர்மன்றத் தலைவர் அவர்கள், அந்தந்த வார்டு உறுப்பினர்கள் மேற்கண்ட இடங்களை ஆய்வு செய்து, குப்பை கொட்டும் இடங்களில் இரும்பு கம்பி வேலி தடுப்பு அமைத்து அவ்விடத்தினை மீட்டு அதில் அடர் மரக்கன்றுகள் நடவும், அதற்கு ஆகும் மதிப்பீடு ரூ. 1,00,000/-க்கு இந்நகராட்சி பொறியாளர்களால் தயார் செய்யப்பட்டு பணிகள் மேற்கொள்ள இந்நகர்மன்றத்தின் அனுமதி கோரப்பட்டுள்ளது மன்றத்தின் முன் வைக்கப்படுகிறது.

**(கோப்பு எண். 226/.2022/.இ1)**

**<u>அலுவலக குறிப்பு</u>**

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) குப்பை கொட்டும் இடங்களில் இரும்பு கம்பி வேலி தடுப்பு அமைக்கும் பணிக்கு மதிப்பீடு ரூ. 1,00,000/-க்கு இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவினங்கள் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மானம் எண்.:</u>** <u>61</u> தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**<u>பொருள் : 39</u>**

கீழக்கரை நகராட்சிப் பகுதியில் உள்ள வார்டு எண். 16, புதுக்குடி, பழைய வார்டு எண்.1 மாட்டுக் கொட்டகை கழிவுநீர் பம்பிங் ஸ்டேசனி உள்ள கழிவு நீர் தொட்டிகளில் அதிகளவில் சேறும் சகதியும் உள்ளதால் கழிவுநீர் தொட்டிகளில் கொள்ளளவு குறைவாக உள்ளதால் கழிவுநீர் வாறுகாலில் இருந்து வெளியேறி பொதுமக்கள் மற்றும் வாகன ஓட்டுபவர்கள் சிரமம் ஏற்படுவதுடன், கழிவு நீர் தொட்டிகளில் அதிகளவில் சேறும் சகதியும் இருப்பதால் மின்மோட்டார் அடுத்தடுத்து பழுதாகி மின்மோட்டார் இயக்குவதில் சிரமம் ஏற்படுகிறது. எனவே, பொதுமக்களின் பொதுசுகாதார நலன் கருதி கழிவுநீர் தொட்டிகளில் உள்ள சேறும் சகதிகளை அப்புறப்படுத்தி மின்மோட்டாரை நல்ல நிலையில் இயக்கி கழிவுநீரை வெளியேற்றுவதற்கு இந்நகராட்சி மின்பணியாளர் அவர்களால் அனுமதி கோரப்பட்டுள்ளது. அதனை தொடர்ந்து இந்நகராட்சி பொறியாளர்களால் மேற்படி இடங்கள் ஆய்வு செய்யப்பட்டு கழிவுநீர் மற்றும் சேறும், சகதியும் உள்ள கழிவுகளை அகற்றும் பணிகள் மேற்கொள்ள உரிய வாகனம், பணியாளர்கள் ஜே.சி.பி. வாகனம் மற்றும் வெளியில் குப்பை கிடங்கில் கொண்டு போய் கழிவுகளை கொட்டுவதற்கான மதிப்பீடு ரூ.50,000/-க்கு இந்நகராட்சி பொறியாளர்களால் அனுமதி கோரப்பட்டுள்ளது மன்றத்தின் அனுமதிக்கு முன் வைக்கப்படுகிறது.

**(கோப்பு எண். 174/.2022/இ1)**

<u>அலுவலக குறிப்பு</u>

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) இந்நகர் பொதுமக்களின் பொதுசுகாதார நலன் கருதி கழிவுநீர் தொட்டிகளில் உள்ள சேறும் சகதிகளை அப்புறப்படுத்தும் பணிக்கு மதிப்பீடு ரூ. 50,000/-க்கு இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவினங்கள் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மானம் எண்.:</u>** <u>62</u> தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.